Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/948)

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 23 திங்கட்கிழமை (10.10.2011) பக்கங்கள் 16 ஓசை – 10



நற்பெயருக்கு களங்கம்

08




இளம்பெண் கிழவியான விசித்திரம்

11



ரம்பாவின் குழந்தைக்கு மாமனின் பரிசு

12



உலகக் கிண்ணம் இலக்கு

07

## பாரத லக்ஷ்மனும், துமிந்த சில்வாவும் ஆயுதங்களை பயன்படுத்த அனுமதியா?

(கொழும்பு)



ஜனாதிபதியின் ஆலோசகரான பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவும் பாதுகாப்பு அமைச்சின் கண்காணிப்பாளர் துமிந்த சில்வாவும் பரஸ்பரம் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர். எனவே இவர்களுக்குஆயுதங்களைப் பயன்படுத்த அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளதா என ஐக்கிய தேசிய கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

அத்துடன், இவர்களுடன் துப்பாக்கி சகிதம் பாதாள உலகக் குண்டர்கள் இருந்துள்ளதாக மக்கள் கூறுகிறார்கள். அவ்வாறெனின் ஆயுதங்களைப் பயன்படுத்த அவர்களுக்கு மட்டும் அரசாங்கம் அனுமதிப்பது ஏன் என ஐக்கிய தேசிய கட்சிக் கேள்வி எழுப்பியதுடன், சம்பவம் குறித்து (15ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அரசுடன் பேசியே தீர்வைக் காண வேண்டும்

### இந்திய வெளிவிவகார செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை அரசுடன் பேச்சை முன்னெடுத்து, இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதற்கு முயற்சிக்க வேண்டுமென இந்திய வெளிவிவகாரச் செயலர் ரஞ்சன் மாத்தாய், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குத் தெரிவித்துள்ளது.

இந்தியத் தூதரகத்தின் ஏற்பாட்டில் கொழும்பிலுள்ள தாஜ்சமுத்திரா ஹோட்டலில் நேற்றிரவு 7.00 மணியளவில் இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பின் போதே வெளிவிவகாரச் செயலர் மேற்கண்டவாறு தெரிவித்ததாக பேச்சில் பங்கெடுத்த கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தினமுரசிற்குத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது முல்லைத்தீவு மாவட்டத்தின் (15ஆம் பக்கம் பார்க்க)

### மனித உரிமை, நல்லாட்சி விடயத்தில்

# இலங்கையின் அர்ப்பணிப்பை வலியுறுத்துகிறது பிரிட்டன்

(கொழும்பு)

மனித உரிமைகள், நல்லாட்சி மற்றும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதில் இலங்கை அரசின் அர்ப்பணிப்பு வெளிப்படுத்தப்படவேண்டியது அவசியமென பிரிட்டன் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

2013 ஆம் ஆண்டில் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாடு இலங்கையின் அம்பாந்தோட்டையில் நடைபெறவுள்ளதாகவும், இதனால் மனித உரிமை விவகாரங்கள் குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டுமெனவும் பிரிட்டன் தெரிவித்துள்ளது.

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் ஆகியன குறித்து அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பொதுநலவாய நாடுகள் மாநாட்டினை ஒழுங்கு செய்துள்ள நாடு என்ற ரீதியில் அமைப்பின் முதன்மை கொள்கைகளை நிலைநாட்ட, இலங்கை கடமைப்பட்டுள்ளதெனவும், இந்த ஆண்டின் இறுதிக்குள் ஏதேனும் மாற்றங்களை எதிர்பார்ப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மீதான குற்றச் சாட்டுக்கள் குறித்து சுயாதீனமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமானது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வட்டக்கச்சியில் பெண் வெட்டிக் கொலை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் வட்டக்கச்சிப் பகுதியில் நேற்று அதிகாலை பெண்ணொருவர் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

ஹட்சன் வீதி, வட்டக்கச்சியைச் சேர்ந்த ஹெலன் மேரி திரேசா (வயது-63) என்ற பெண்ணே வெட்டிக் கொலை செய்யப்பட்டவராவார்.

நேற்று முன்தினம் மாலை குறித்த பெண்ணின் வீட்டிற்கு வந்த மூவர் அவ்வீட்டில் இரவுநேர உணவை உட்கொண்ட பின்னர் அங்கேயே தங்கியுள்ளனர். இவர்களுக்கு உணவைப் பரிமாறி விட்டு குறித்த (15ஆம் பக்கம் பார்க்க)

## பிரேமச்சந்திரவின் உடலுக்கு அமைச்சர் டக்ளஸ் அஞ்சலி



(கொழும்பு)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் தொழிற்சங்க விவகாரங்களுககான பணிப்பாளர் நாயகமுமாகிய பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் பூதவுடலுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது இறுதி அஞ்சலியை செலுத்தினார். நேற்று முன்தினம் மாலை கொழும்பு கொலன்னாவைப் பகுதியில் இடம்பெற்ற அசம்பாவித சம்பவமொன்றின் போது பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

தனது இறுதி அஞ்சலியை செலுத்திய அமைச்சர் அமரர் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர குடும்பத்தாருக்கு தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொண்டார்.

## குடாநாட்டு நிலைமைகளை பார்வையிட வந்தார் மாத்தாய்

(யாழ்ப்பாணம்)

மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்திய வெளியுறவுச் செயலாளர் ரஞ்சன் மாத்தாய நேற்றைய தினம் குடாநாட்டிற்கான விஜயத்தை மேற்கொண்டு இந்தியாவின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு திட்டங்களைச் சென்று பார்வையிட்டதுடன், குடாநாட்டு நிலைமைகள் தொடர்பாகவும் கேட்டறிந்ததாக அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தாவது,

நேற்றுக்காலை குடாநாட்டிற்கு விஜயம் செய்த வெளியுறவுச் செயலாளர் ரஞ்சன் மாத்தாய் அடங்கிய குழுவினர் இந்திய அரசின் நிதியுதவியுடன் புனரமைக்கப்படும் காங்கேசன் துறை துறைமுகப் பணிகளைப் பார்வையிட்டனர். அத்துடன் வேலணையில் மேற்கொள்ளப்படும் குளப்புனரமைப்புகள், மீள்குடியேற்ற நடவடிக்கைகளையும் பார்வையிட்டனர்.

இதன்பின்னரான சந்திப்பில் இந்திய மீனவர்களால் வடபகுதி மீனவர்கள் நாளாந்தம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், இதனால் அவர்களின் வாழ்க்கை நிலையில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதுடன், அதற்கான விளக்கமும் அளிக்கப்பட்டது.

போர்க்காலத்தில் மீனவர்களும், மீனவக் குடும்பங்களும் எதிர் நோக்கிய பிரச்சினைகள் போர் முடிவடைந்த பின்னர் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டதுடன், (15ஆம் பக்கம் பார்க்க)

## சுயாதீன பொலிஸ் சேவை உருவாக்குவது அவசியம்

### மனித உரிமை ஆர்வலர் வெலியமுன வலியுறுத்து

(கொழும்பு)

சுயாதீன பொலிஸ் சேவை உருவாக்கப்படுவது அவசியமானதென ஜனநாயக சட்டத்தரணிகள் அமைப்பின் அமைப்பாளரும், சிரேஷ்ட மனித உரிமை ஆர்வலருமான சட்டத்தரணி ஜே.சீ.வெலியமுன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தாவது,

நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட வேண்டியது மிகவும் அவசியமானது பொலிஸ் தடுப்புக் காவலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் உயிரிழக்கும் (15ஆம் பக்கம் பார்க்க)

## பலாலி ஆசிரிய கலாசாலையில் பாலியல் துஷ்பிரயோக முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில், கல்வி கற்கும் ஆசிரிய மாணவிகளும், கற்பிக்கும் பெண் விரிவுரையாளர்களும் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படுவது அதிகரித்து வருவதாக அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

குடாநாட்டில் பெண்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகம் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், பலாலி ஆசிரிய மாணவிகள் மற்றும் விரிவுரையாளர்கள் பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்யப்படுவது தொடர்பான பல முறைப்பாடுகள் எனக்கு கிடைத்துள்ளன. இது தொடர்பாக் சம்பந்தப்பட்டவர்களுக்குஎதிராக தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனஅவர் மேலும் தெரிவித்தார். (எஸ்)

# மீசாலை பழமுதிர் சோலையின் 2 ஆம் கட்ட விரிவாக்கம் ஆரம்பம்

(சாவகச்சேரி)

விவசாயத் திணைக்களத்தின் உதவியுடன் விவசாய சம்மேளனங்களினால் மீசாலை பழமுதிர்ச் சோலையின் இரண்டாம் கட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தற்போது இந்நிலையத்தின் ஊடாக பழவகைகளும், பழச் சாறுகளுமே விற்பனை செய்யப்பட்டு வரும் நிலையில், இரண்டாம் கட்ட வேலைகள் முடிவுற்றதும் பழங்களைப் பதப்படுத்தி தரத்தில் அடைத்து விற்பனை செய்யும் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த பல இளைஞர், யுவதிகளுக்கு வேலை




வாய்ப்புக் கிடைக்கும். அத்துடன், பழத்தோட்ட விவசாயிகளும் நன்மையடைவார்கள் என விவசாயத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற விவசாயக் கண்காட்சியில் திணைக்களம் பல இலட்சம் ரூபா பெறுமதியில் பழரச விற்பனை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-11)

# சர்வதேச அஞ்சல் தின நிகழ்வு

(பருத்தித்துறை)

சர்வதேச அஞ்சல் தினத்தை முன்னிட்டு அஞ்சல் தின நிகழ்வு பருத்தித்துறை அஞ்சல் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது.

காலை 8.00 மணிக்கு ஆரம்பமான நிகழ்வில் தேசியக் கொடியினை அஞ்சல் அதிபர் உ.ரகுபதி ஏற்றிவைத்தார். அஞ்சல் திணைக்களக் கொடியினை உதவி- அஞ்சல் அதிபர் பா.பிறேமதாஸ் ஏற்றி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற நிகழ்வில் ஊழியர்களால் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் வைத்து இரத்த தானம் வழங்கப்பட்டதுடன் சிரமதான நிகழ்வும் இடம்பெற்றது.

# பருத்தித்துறை – யாழ் கடுகதி சேவை விரைவில்



(யாழ்ப்பாணம்)

இலங்கைப் போக்குவரத்துச் சபை பருத்தித்துறை கிளையினால் பருத்தித்துறை - யாழ்ப்பாணம் கடுகதி பேருந்துச் சேவை விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

30 வருடத்திற்கு முன்னர் இருந்ததுபோல் மணித்தியாலத்திற்கு ஒரு பஸ் என்ற விகிதம் சேவை இடம்பெறும் என போக்குவரத்து துறை முகாமையாளர் குணபாலசெல்வம் தெரிவித்துள்ளார்.

மேலும் மகிந்த சிந்தனையில் களுத்துறை போக்குவரத்துச் சபையினால் 09.07.2011 இல் இலங்கை போக்குவரத்து துறை அமைச்சர் குமார் வெல்கம 2 புதிய பஸ்களை பருத்தித்துறை கிளையினரிடம் கையளித்துள்ளார்.

இவ்விரு பஸ்களும் கடனடிப் படையில் பெற்றுக்கொள்ளப் பட்டது. இந்த பஸ்கள் மூலம் பருத்தித்துறை - யாழ். சேவையை சீராக்க முடியும் என முகாமையாளர் நம்பிக்கை தெரிவித்தார். (116)

# தெல்லிப்பளையில் மருத்துவ முகாம்



(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை ஓய்வூதியர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் மருத்துவ முகாமொன்று தெல்லிப்பளை ஸ்ரீதுர்க்கையம்மன் ஆலய மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இம்மருத்துவ முகாமில் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையின் வைத்தியர்களான பூ.அங்கனி, கே.சபாநடேசன் மற்றும் தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைச் சேர்ந்த சுகாதாரப் பரிசோதகர்களான என்.திவாசுதன், கே.அஜந்தன், பொதுச்சுகாதார மருத்துவமாதுக்கள் ஆகியோர் கலந்து கொண்டு தமது சேவையினை வழங்கினர்.

## அதிபர்களுக்கு கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கல்விக் கோட்ட அதிபர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று நண்பகல் 12.00 மணிக்கு கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலை அதிபர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராஜா கேட்டுக்கொண்டுள்ளார்.

# தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட சிறுவன் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

அலரி விதை உட்கொண்டு தற்கொலைக்கு முயற்சித்த 17 வயதுச் சிறுவன் ஒருவன் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளான்.

சுதுமலை அண்ணாமலை வீதியைச் சேர்ந்த சிறுவனே இவ்வாறு தற்கொலை முயற்சியை மேற்கொண்டான்.

சம்பவம் பற்றி தந்தையார் தெரிவித்ததாவது,

மகன் பாடசாலைக் கல்வியை நிறுத்திவிட்டு வீட்டில் இருந்தான். துடிப்பான எனது மகனை சிறுவர் இல்லம் ஒன்றில் ஒப்படைத்தேன்.

அங்கிருந்து வந்தவன் கோவில் ஒன்றுக்கு சென்று தற்கொலை முயற்சியில் ஈடுபட்டான் எனத் தெரிவித்தார். (எஸ்)

## ஒரு மணி நேரத்தில் பிறப்பு இறப்பு சான்றிதழ்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் பிறப்பு-இறப்பு அத்தாட்சிப் பத்திரங்களை விண்ணப்பித்த ஒரு மணி நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியுமென பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கணினி மயப்படுத்தப்பட்ட இச்சேவையானது 12.10.2011 முதல் நடைமுறைக்கு வரும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (116)

# வரம் தரும் வல்லிபுரத்தான் இன்று தேர்த்திருவிழா


நாட்டின் நகரங்கள் ஒவ்வொன்றின் தோற்றுவாய்க்கும் வளர்ச்சிக்கும் வேறுபட்ட கதைப் பின்னணிகள் களமாக அமைந்துள்ளன. அதே தன்மைதான் வல்லிபுரம் என்னும் நகரத்தின் தோற்றத்திற்கு தனித்துவமான கதைக்கரு ஒன்று ஆழமாகக் கால் பதிந்துள்ளது.

இவ்வகையில் 'வல்லிபுரம்' என்னும் நகரம் எத்தகைய வீரியத்துடன் விரிந்து கிடக்கின்றது என்பதை நோக்குமிடத்து இந் நகரம் மன்னர் ஆட்சிக்காலத்தில் முக்கியம் பெற்றதுடன் மட்டும் நின்றுவிடாது அதன் பின்னரும் சிறப்புக்கள், பெருமைகள் குன்றாது இருப்பதும் சிறப்புத்தான். இதற்கு ஆதாரங்களும் முன்னர் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அதாவது வல்லிபுரப் பொன்னேடு என்னும் கல்வெட்டு இதற்குச் சான்று பகர்கிறது. இத்தகைய சிறப்புக்களும், பெருமைகளும் கொண்ட 'வல்லிபுர ஆழ்வார்' என்னும் பெயர் கொண்டு உலகத்தவர் கைகூப்பி வணங்கும் பொருத்தப்பாடுடைய சக்கரத்தாழ்வார் குடிகொள்ளும் புனித் தலம் அமைந்துள்ளமை இந் நகரின் சிறப்பை மேலும் மெருகூட்டுகிறது.

இவ்வல்லிபுர ஆழ்வாரின் தோற்றச் சிறப்புக்களைத் தொட்டுப் பார்க்கின் இதன் தோற்றத்திற்கு இரு கதைகள் தட்ஷிணாகைலாய புராணத்திலே கூறப்படுகிறது.

முன்பு இரணியன் எனும் அசுரன் தேவர்களுக்கு பல்வேறுபட்ட இன்னல்களைக் கொடுத்து வந்தான். இதன்காரணமாக தேவர்கள் தங்கள் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் முக



மாக இராட்சஷ கணங்களைக் கட்டியிருந்தார்கள்.

இதனால் தேவர்களுக்கு அண்மையில் இரணியனால் இச்செயற்பாடுகளை அறிந்த இரணியன் தன்னுடைய ஏவலர்களைக் கொண்டு அக்கணங்களை எடுத்து ஆழ்கடலில் எறிந்தான்.

இதன் காரணமாக தேவர்கள் தங்களது கங்கணங்களை எடுத்துத்தருமாறு சிவபெருமானை நோக்கித் தவமிருந்தார்கள். சிவன், விஷ்ணு பிரானிடம் அக்கணங்களை எடுத்துக் கொடுக்குமாறு பணிக்க எல்லாம் வல்ல மாயவன் வங்கக் கடலிலே கற்கோவளக் கடற்கரையில் அவதரித்து 'வல்லிபுரம்' என்னும் நகரிலே அதாவது இப்பொழுதுள்ள வல்லிபுரக் கோயிலில் வைத்துவிட்டு மறைந்தார்.

இதேபோன்று விஷ்ணு மச்சவதாரம் எடுத்து 'வல்லிபுரம்' என்னும் தலம் தோற்றம் பெறுவதற்கு மற்றுமொரு கதை தட்ஷிணகைலாச புராணத்தில் கூறப்படுகின்றது.

அதாவது இளவல்லி என்னும் மாது நாகசாபம் நீங்கி புத்திரப்பேறு பெற்றுக்கொண்டமையும் இதே புண்ணிய தலத்திற்தான். ஒருநாள் கிருஷ்ண பரமாத்மா கற்கோவளக் கடலிலே மீன்பிடித்துக் கொண்டிருந்த வலைஞர்களின் வலைத் தொடரில் பிடிபட்டு மிகவும் துள்ளிப் பாய்ந்து கொண்டிருந்தது. ஆம் மீன் தோற்றம் கொண்டு வந்த மாயக்கண்ணன் மீனைப் பிடிக்க வேண்டும் என்ற அவாவுடன் அதனைப் பிடித்த அதிசய நிகழ்ச்சியை பார்ப்பதற்கு மக்கள் எல்லோரும் அங்கே வந்து கூடினர்.

இவ்வாறு அங்கு மக்களோடு மக்களாக வந்திருந்த இளவல்லி என்னும் திருக்கன்னியின் மடியில் துள்ளிக் குதித்து நொடிப்பொழுதில் அம்மீன் ஒரு குழந்தையாக தோற்றம் அளித்தது. அக்குழந்தையானது பச்சைமரத் தளிர் போன்ற மேனியும், பீதாம்பரம் உடுத்தவரும், துளசி மாலை அணிந்தவரும், அழகிய மார்பினை உடையவரும், நான்கு புஜங்களோடு கூடியவரும், சங்கு சக்கரங்களைக் கைகளில் ஏந்தியவருமாகத் தோற்றமளித்தார்.

இதன் காரணமாகத்தான் ஆழ்வார்கள் கண்ணனின் தோற்றப் பொலிவினை

**'பச்சைமா மலை போல் மேனி**
**பவளவாய் கமலச் செங்கண்**
**அச்சுதா அமரர் ஏறே அமரர்**
**தம் கொழுந்தே என்னும்**
**இச்சுவை தவிர யான் போய்**
**இந்திர லோகம் ஆழும்**
**அச்சுவை பெறினும் வேண்**
**டேன் அரங்கமா நகருள்ளானே'**

எனப் பாடியுள்ளனர்.

# பிரதேச நிர்வாக எல்லைகள் கிளிநொச்சியில் மீளாய்வு கூட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி பிரதேச செயலகப் பிரிவை இரண்டாகப் பிரிப்பது, பூநகரி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட நாச்சிக்குடா கிராம அலுவலர் பிரிவில் மேலும் ஒரு கிராம அலுவலர் பிரிவை உருவாக்குவது, அதன் எல்லைகளை நிர்ணயிப்பது தொடர்பிலான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இக் கலந்துரையாடலில் பிரதேச கிராம மட்ட அமைப்புக்கள், கிராம அலுவலர்கள் மற்றும் அதிகாரிகள் பலர் கலந்துகொள்ளவுள்ளனர். (உ-கே)

# சுகாதாரப் பணியாளர் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய சுகநல வாரத்தின் இறுதி நிகழ்வு இன்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் பிற்பகல் 2.00மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் சுகாதாரப் பணியாளர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளதுடன், வடமாகாணத்தின் சிறந்த மற்றும் நீண்டகாலம் சேவையாற்றிய சுகாதாரப் பணியாளர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் இடம் பெறவுள்ளது.

இதில் வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், வடமாகாண சுகாதார சேவை பணிமனைகளின் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (39)

அனைத்து உயிர்களிடமும் அன்பு செலுத்த வேண்டும். இயற்கை விதியை அனுசரித்து வாழவேண்டும். அடக்கம், பொறுமை, ஜீவகாருண்யம் போன்ற குணங்களை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

- சாள்ஸ்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## அறிவியலை வசீகரமாக்கியவர்

ஆறாம் திகதி காலமான அப்பிள் நிறுவனர் ஸ்டீவ் ஜொப்ஸ் பற்றிய பேச்சுக்கள் இணைய உலகில் இன்னமும் ஓயவில்லை. ஐ–போன் தொடுதிரையை நோக்கி தேவதூதனின் விரல் நீளுவதாக ஒரு கார்ட்டூன், இறையழைப்பில் சென்றிருக்கிறார் அவர் என்பதைக் குறிப்பிடுகிறது. I-Sad என்று சோகத்தைத் தலைப்பிட்டிருக்கிறது ஓர் ஆங்கில நாளிதழ். "மூன்று அப்பிள்கள் முக்கியமானவை. முதல் அப்பிள் ஏவாள் உண்டது. இரண்டாவது அப்பிள் நியூட்டனின் சிந்தனையைத் தூண்டியது. மூன்றாவது அப்பிள் மனித சமூகம் அனைத்தையும் வசீகரித்தது" என்று ட்விட்டரில் பேசப்படுகிறது.

ஒரு மனிதனின் மரணம் உலக மக்கள் அனைவருக்கும் துக்கமாக மாறுகிறது என்றால், அந்த மனிதரால் ஒவ்வொருவரும் ஏதோ ஒருவகையில் பயன் அடைந்திருந்தாலொழிய அது சாத்தியமில்லை. தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் அனைவரும், ஜொப்ஸை தெரிந்திருந்தாலும் தெரிந்திராவிட்டாலும், அவர் முக்கியமானவர் என்பதைப் புரிந்து வருத்தமடைகிறார்கள்.

"ஸ்டீவ் ஜொப்ஸ் நமது வாழ்க்கையை மாற்றியவர், ஒட்டுமொத்தமாக பல தொழில்களுக்கு புது அர்த்தம் தந்தவர். அவரது மரணம் குறித்து அவர் கண்டுபிடித்த கருவியிலேயே உலகில் பெரும்பாலானோர் தெரிந்து கொண்டனர் என்பதைவிட அவருக்கு பெரிய அஞ்சலி எதுவும் இருக்க முடியாது" என்று தனது அஞ்சலிச் செய்தியில் சொல்கிறார் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா. "ஸ்டீவ் ஜொப்ஸ் செலுத்திய தாக்கத்தைப் போல உலகில் வேறொருவர் செய்துவிட முடியாது" என்றார் மைக்ரோசொப்டின் பில் கேட்ஸ். பேஸ் புக் இணையத் தளத்தின் நிறுவுனரான, மார்க் ஸூக்கர்பெர்க், "நாம் ஒன்றை உருவாக்குவதன் மூலம் உலகை மாற்ற முடியும் என்று காட்டியதற்கு நன்றி" என்று தன் அஞ்சலிக் குறிப்பில் கூறுகிறார். மற்றும் பலர் அவரை தோமஸ் அல்வா எடிசன் மற்றும் ஐன்ஸ்டீனோடு ஒப்பிட்டு புகழஞ்சலி செலுத்தியுள்ளனர். சீனாவில் சமூக இணையத்தளம் ஒன்றில், 5 கோடிக்கும் மேலான அஞ்சலிக் குறிப்புகள் பதியப்பட்டுள்ளன.

தொழில்நுட்பத்துக்குள் அறிவியலை வசீகரத்துடன் நுழையச் செய்தவர் ஜொப்ஸ். ஐ–போட், ஐ–ஃபோன், ஐ–பாட் இந்த மூன்றும் அவரது மாயாஜால சாதனைகள் என்று எல்லோரும் வியக்கிறார்கள். ஐ–போட் வாங்குவதற்கு முதல்நாள் இரவே வந்து படுத்துக்கிடந்தனர் வாடிக்கையாளர்கள். தொடுதிரை வசதியுடன் அடுத்து இவர் அறிமுகம் செய்த ஐ–போன் வாங்குவதற்கும் இதேபோன்று வரிசையில் கால்கடுக்கக் காத்திருந்தார்கள். கணினியை கையளவுக்கு மாற்றி, இவர் ஐ–பாட் அறிமுகம் செய்தபோதும் புதுமை விரும்பிகள் உலகெங்கிலும் குதூகலித்தார்கள்.

ஸ்டீவ் ஜொப்ஸ் கல்லூரிப் படிப்பைக்கூட ஒழுங்காக முடிக்கவில்லை. பிறக்கும்போதே பணக்கார வீட்டுச் செல்லக் குழந்தை இல்லை. எந்த நிறுவனத்திலும் சேர்ந்து அவர் நிர்வாக, தொழில்நுட்ப, தலைமைப் பயிற்சிகள் எடுத்துக் கொள்ளவில்லை. அவர் வெளியிட்ட எந்த ஒரு அப்பிள் தயாரிப்புக்கும் வரைபுச் சோதனை விற்பனைச் சோதனை என்று எதுவும் செய்ததில்லை. எல்லாமே அவர் மூளையில் உருவாகிய தயாரிப்புகள்தான். சாதாரணமான, அறிவியல் பரிச்சயம் இல்லாதவர்களும் கூட கண்ணை மூடிக்கொண்டு பயன்படுத்தும் படியாகத் தன் அழகிய கண்டுபிடிப்புகளைச் செய்தார்.

ஜொப்ஸ் அறுபதுகளில் எழுந்த ஹிப்பி எதிர்கலாசாரக் குழுக்களின் வாழ்வியல் முறைகளினாலும் கலைகளினாலும் தாக்கம் பெற்றவர். இந்திய மரபு ஞானத்தில் ஈடுபாடு கொண்டு புத்த மதத்தைத் தழுவியிருந்தார். தன்னுடைய கல்லூரி நாட்களில் ஏழு மைல் நடந்து போய் கலிஃபோர்னியாவிலுள்ள ஹரே கிருஷ்ணா இயக்கக் கோவிலில் இலவச மதிய உணவை தொடர்ந்து சாப்பிட்டதை பல பேட்டிகளில் சொல்லியிருக்கிறார். மனித பரிணாம வளர்ச்சி என்பது கூட்டாகவே சாத்தியம் என்ற எதிர்கலாசார விழுமியமே கணினிகள் எல்லோரையும் சென்றடையவேண்டும், எல்லோரும் பயனர்களாக வேண்டும் என்ற பாதையை ஜொப்ஸிற்குக் காட்டக்கூடியதாக இருந்திருக்கிறது.

கடந்த ஏழு ஆண்டுகளுக்கும் மேலாக புற்றுநோயால் அவதிப்பட்டு வந்த ஸ்டீவ் ஜொப்ஸ், "நான் விரைவில் இறந்துவிடுவேன் என்பது தான் வாழ்க்கையின் முக்கிய தேர்வுகளைச் செய்ய எனக்கு உதவிய அதிமுக்கிய கருவி" என்றார். அவர் உருவாக்கி உலவ விட்டிருக்கும் பொருட்களில் எல்லாம் தன் வாழ்வைப் பொறித்துவிட்டுச் சென்றிருக்கிறார்.

– ஆசிரியர்

# வாசிப்புத் திறன் அருகி வருவதால் சமூகப் பிரச்சினைகள் அதிகரிப்பு

## வல்வெட்டித்துறை நகரச்சபைத் தலைவர்

(யாழ்ப்பாணம்)

வாசிப்புத் திறன் அருகி வருவதால் பல சமூகப்பிரச்சினைகள் அதிகரித்து வருவதாக வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் நடராசா அனந்தராஜ் நகரசபை மண்டபத்தில் தேசிய வாசிப்பு மாதம் தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடலின்போது தெரிவித்தார்.

வாசிப்பு மூலம் ஒவ்வொரு மனிதனும் முழுமையடைகின்றான் என்பதை இன்று நாமே கண்கூடாகப் பார்க்கின்றோம். அபிவிருத்தியை நோக்கிய பயணத்தில் நாம் வெற்றிகரமாகப் பயணிப்பதற்கு கிராமங்களில் நிறுவப்பட்டுள்ள நூலகங்கள் வினைத்திறன் மிக்கதாக்கப்பட வேண்டும். இதற்கு எமது நகரசபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களும், நூலகங்களும் மக்கள் மத்தியில் தமது சேவையை திறந்த மனதுடன் ஆற்றுவதற்கு முன்வரவேண்டும்.

இன்று எமது எல்லைக்குட்பட்ட சில சனசமூக நிலையங்கள் பலவருடங்களாக இயங் காது செயலிழந்து காணப்படுவதால், அந்த நிலைய நிர்வாகிகள் தமது பொறுப்புக்களை இளைஞர்களிடம் கையளித்து அவற்றை செயற்திறன் மிக்கதாக்க முன்வரவேண்டும் என தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் சனசமூக உத்தியோகத்தர் திருமதி. பரமேஸ்வரி, நகரசபை உறுப்பினர்களான தி.ஜெகதீஸ், க.ஜெயராஜா மற்றும் பொதுசனத் தொடர்பு அலுவலர் செல்வி. பிரேமா, பிரதம முகாமைத்துவ உதவியாளர் திருமதி.சாந்தி திருஞானசம்பந்தர், செயலாளர் திருமதி.ச.சந்திரயோகம் உட்பட வாசகர் வட்ட அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர்.

# ஓட்டோ மோதி மாணவி காயம்

(யாழ்ப்பாணம்)

தனியார் வகுப்புக்குச் சென்றுவிட்டு சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்த மாணவி மீது ஓட்டோ மோதி விபத்துக்குள்ளானதில் மாணவி படுகாயமடைந்த சம்பவமொன்று ஈச்சமோட்டைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது

குறித்த மாணவி ஈச்சமோட்டை மறவன் குளம் சந்தியில் வந்து கொண்டிருந்த சமயம் எதிராக வந்துகொண்டிருந்த முச்சக்கரவண்டி வேகக் கட்டுப்பாட்டை இழந்து மாணவியின் சைக்கிள் மீது மோதி விபத்து ஏற்பட்டது.

இவ்விபத்தில் படுகாயமடைந்த மாணவி யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(உ.21)

# சம்பூர் கடற்பரப்பில் 16 மீனவர்கள் கைது

(திருகோணமலை)

திருகோணமலை, சம்பூர் அதியுயர் பாதுகாப்புக் கடற்பரப்பில் 6 மீன்பிடிப் படகுகளுடன் 16 மீனவர்கள் கைதுசெய்யப்பட்டனர். இந்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட 16 மீனவர்களும் திருகோணமலை துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# தமிழர் ஆசிரியர் சங்க மாநாடு நவம்பர் மாதம் யாழ்ப்பாணத்தில்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் நடத்தும் தாய்ச்சங்க மகாநாடு எதிர்வரும் நவம்பர் மாதம் 4 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் பொதுச்செயலாளர் சரா.புவனேஸ்வரன் தெரிவித்துள்ளார்.


கடந்த 3ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இலங்கையின் அனைத்துப் பிரதேசங்களிலும் இருந்து வருகை தந்த தாய்ச் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்ட தாய்ச்சங்கக் கூட்டத்தில் இத் தீர்மானம் நிறைவேற் றப்பட்டுள்ளது.

அன்றைய தினம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளராக இருந்த த.மகாசிவம் அவர்கள் தனது பொதுச்செயலாளர் பொறுப்பில் இருந்து ஓய்வு நிலைக்கு வந்தமையால். புதிய பொதுச்செயலாளராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் சரா.புவனேஸ்வரன் தாய்ச்சங்க உறுப்பினர்களால் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

சங்கத்தின் தலைவராக சங்கத்தின் அம்பாறை மாவட்டச் செயலாளர் த.சகாதேவராஜாவும், நிதிச்செயலாளராக தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி ஆசிரியர் சி.தேவகுமாரனும் தெரிவுசெய்யப்பட்டனர்.

நடைபெறவுள்ள தாய்ச்சங்க மாநாட்டிற்கு நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் உள்ள சங்கத்தின் உறுப்பினர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்படும் எனவும், இம் மாநாடானது ஆசிரியர்களின் உயர்ந்த பணியை உலகறியச் செய்யும் எனவும் பொதுச்செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வேதனப் பிரச்சினை பொதுவானது



அரச சேவையாளர்கள் தொழில் அதிகாரிகள் சங்கம், எதிர்வரும் 14ஆம் திகதி முதல், தொழிற்சங்க நடவடிக்கை ஒன்றை முன்னெடுக்கவுள்ளது. இந்தத் தகவலை சங்கத்தின் உபதலைவர் ஐ.பி. கமகே வெளியிட்டுள்ளார். குறித்த சங்க தொழிலாளர்களுக்கான வேதனப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படாமை காரணமாகவே இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தொழில் அமைச்சர் காமினி லொக்குகேயிடம் தெரிவித்ததாவது, வேதனம் தொடர்பான பிரச்சினை அவர்களுக்கு மட்டும் உள்ள பிரச்சினை அல்லவென குறிப்பிட்டார். இந்த நிலையில், அனைத்து சேவையாளர்களதும் வேதனப் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் முகமாக கலந்துரை யாடப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# வசாவிளான் வித்தியாலயத்திற்கு புதிய விஞ்ஞான ஆய்வு கூடம்

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்திற்குப் புதிய விஞ்ஞான கூடம் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான நிதியினை வேள்ட் விஷன் தொண்டு நிறுவனம் வழங்கவுள்ளதாகப் பாடசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தப் புதிய ஆய்வு கூடம் அமைப்பதற்கான ஆரம்பகட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், இதற்கென இந்நிறுவனம் ஐந்து மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த யுத்த அனர்த்தத்தினால் பெரும் பாதிப்புக்குள்ளான இப்பாடசாலை தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இப்பாடசாலை சொந்த இடத்தில் இயங்கத் தொடங்கியது முதல் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் அண்மைக்காலமாக நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(06)

பொதுசன நூலகம்

## குருநகர்ப் பகுதி சுத்திகரிப்பை சீரமைக்க வேண்டுகோள்

(குருநகர்)

குருநகர்ப் பகுதியில் அமைந்துள்ள வீதிகள் குப்பை கூழங்களால் ஆக்கிரமிக்கப்பட்டு காணப்படுகின்றன.

இப்பகுதி வடிகால்களும் சுத்திகரிப்புச் செய்யப்படாமல் இருந்து வருகிறது. ஒரு வாரத்துக்கு முன்பாக இப்பகுதிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த மாநகர சபை முதல்வரின் பணிப்பின் பேரில் சில தினங்கள் இப்பகுதிகள் குப்பைகள் அகற்றப்பட்டும் வடிகால் சுத்திகரிப்பு செய்யப்பட்டும் வந்தன.

ஆனால், மறுபடியும் பழையபடி வீதிகள் குப்பை கூழங்களால் நிரம்பியும் வடிகால்கள் தினமும் சுத்திரிக்கப்படாமலும் கைவிடப்பட்டுள்ளன.

இப்பகுதிக்குப் போதியளவு சுத்திகரிப்பாளர், வீதி பெருக்கும் பெண்கள் நியமிக்கப்பட்டிருந்தும் கண்காணிப்புச் செய்வோர் கண்மூடித்தனமாக இருப்பதால் ஒழுங்காகப் பணி மேற்கொள்ளப்படுவதில்லையெனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நகரின் ஏனைய பகுதிகளில் நாளொன்றில் இரண்டு தடவைக்கும் மேலாகச் சுத்திகரிப்பு வேலைகள் நடைபெற்று வரும் போது மக்கள் நெருக்கடியாக வாழ்கின்ற குருநகர்ப் பகுதியில் தினமொரு தடவையாவது சுத்திகரிப்பு வேலைகள் நடைபெறுவதில்லை என மக்கள் புகார் மேற்கொள்கின்றனர். (68)

## மருத்துவப் பரிசோதனையும் சிரமதானப் பணிகளும்

(வடமராட்சி)

தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு கடந்த 7ஆம் திகதி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஆர். ரவீந்திரன், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆர். கேதீஸ்வரன் ஆகியோர் சிரமதானப் பணிகளை ஆரம்பித்து வைத்தனர்.

இதில் வைத்தியசாலை ஊழியர்கள், பருத்தித்துறை, கரவெட்டி, சுகாதார வைத்தியசாலை ஊழியர்கள், குடும்ப நல சேவை உத்தியோகத்தர்கள், பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள், பருத்தித்துறை பொலிஸார், பிரதேச இராணுவத்தினர், யாழ். நெல்லியடி மத்திய மகாவித்தியாலய சாரணரும், யாழ். ஹாட்லிக் கல்லூரி சாரணரும் மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து அன்றைய தினம் முதியோருக்கான இலவச மருத்துவப் பரிசோதனையும், கருத்தரங்கும் பருத்தித்துறை ஆரம்ப வைத்திய சுகாதாரப் பணிமனையில் வைத்திய கலாநிதி ஜெயசாந்தி தலைமையில் நடைபெற்றது. இதில் 63 முதியவர்கள் இலவச மருத்துவப் பரிசோதனையைப் பெற்றுக் கொண்டனர். (உ-116)

## பாட நூல் விநியோகம்

(பருத்தித்துறை)

கரவெட்டிக் கோட்டக் கல்வி அலுவலகத்திற்கு 2012 ஆம் ஆண்டுக்கான ஒரு தொகுதி பாட நூல்கள் நேற்று முன்தினம் கிடைத் துள்ளதாக கரவெட்டிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இப்பாடநூல்கள் பாடசாலைகளுக்கு நாளை மறு தினம் புதன்கிழமை காலை 9.00 மணி முதல் விநியோகிக் கப்படவுள்ளதால் நூல்களைப் பெற்றுக்கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-109)

## பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியால் குரு பிரதீபா பிரபா விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட கோண்டாவில் இந்து மகா வித்தியாலய அதிபர் கு. சண்முககுமாருக்கான பாராட்டு விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை ஆசிரிய நலன் புரிக்கழகத் தலைவர் பு. கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வு பாடசாலை பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், ஆசிரியர் நலன் புரிக் கழகம் என்பவற்றினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (உ-10)

## முதியோர் தினவிழா

(ஆனைக்கோட்டை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் முதியோர் தின விழா எதிர்வரும் 22ஆம் திகதி சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் பிரதேச செயலர் திருமதி ஆ.யோ. எழிலரசி தலைமையில் நடைபெறவுள்ளது.

இதேவேளை, சிறுவர் தின நிகழ்வு எதிர்வரும் 26ஆம் திகதி அதே கல்லூரியில் நடைபெறவுள்ளதாக பிரதேச செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-104)

## சேவையிலிருந்து ஓய்வு

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலயத்தில் சேவையாற்றிய கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ். நாகராஜா கடந்த 7ஆம் திகதி ஓய்வுபெற்றுச் சென்றுள்ளார். இவர் இவ் வலயத்தில் 12 ஆண்டுகள் பிரதிக் கல்விப் பணிப்பாளராகச் சேவையாற்றி வந்துடன், ஆரம்பத்தில் பயிற்றப்பட்ட கணித பாட ஆசிரியராகத் தன் சேவையை ஆரம்பித்தவர். முதுகலைமாணி பட்டப் பின் கல்வி டிப்ளோமா முதலான பட்டங்களைப் பெற்றுப் பின் கடமை நிறைவேற்று பிரதிக் கல்விப் பணிப்பாளராக 1999ஆம் ஆண்டு முதல் 2011ஆம் ஆண்டு வரை வலிகாமம் கல்வி வலயத்தில் சேவையாற்றியுள்ளார். (06)


# சேவை நேரத்தில் பழுதடையும் பேருந்துகள் சிரமங்களை எதிர்நோக்கும் பொதுமக்கள்


(வடமராட்சி கிழக்கு)

இலங்கை போக்குவரத்துச் சபை யாழ்ப்பாணம் சாலையினால் நடாத்தப்படும் பாதை இலக்கம் 807 யாழ்ப்பாணம் - ஆழியவளை ஊடான கட்டைக்காடு வரையுமான சேவையில் ஈடுபடும் பேருந்து வண்டிகள் சேவை நேரத்தில் அடிக்கடி பழுதடைவதினால் இப்பகுதி மக்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

நாளாந்தம் யாழ்ப்பாணத்தில் இருந்து ஐந்து சேவைகளும், கேவில், கட்டைக்காட்டில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு ஐந்து சேவைகளும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தபோதிலும், இப்பாதையில் பழைய பேருந்து வண்டிகளே கூடுதலாக சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன. இவைகள் சேவை நேரத்தில் அடிக்கடி பழுதடைவதினால் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அரச ஊழியர்கள், பொதுமக்கள் உரிய நேரத்தில் உரிய இடங்களுக்குச் செல்ல முடியாத நிலையில் உள்ளனர்.

இலங்கை போக்குவரத்துச் சபை யாழ்ப்பாணம் சாலையினால் குடாநாட்டுக்குள் நடத்தப்படும் 75 கிலோ மீற்றர் தூரம் கொண்ட இப் பாதையில் நல்ல நிலையிலுள்ள பேருந்து வண்டிகளை சேவையில் ஈடுபடுத்தி உதவுமாறு இப்பிரதேச பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அரச ஊழியர்கள், பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (70)





யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் நடைபெற்ற ஆசிரியர் தின நிகழ்வில் கல்லூரி அதிபர் மாணவர் ஒருவருக்கு பதக்கம் அணிவிப்பதையும், கலந்து கொண்ட மாணவர்களில் ஒரு பகுதியினரையும் காணலாம். (105)

## காலபோக செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கான கூட்டங்கள்

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் வவுனிக்குளம் பிரிவின் கீழான குளங்களின் கீழ் 2011/2012 காலபோக நெற் செய்கையை மேற்கொள்ளவுள்ள விவசாயிகளுக்கான கூட்டங்கள் நாளை செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டங்கள் பின்வரும் அட்டவணையின் கீழ் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி தேறான் கண்டல் குளத்தின் கீழ் நெற் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு தேறான் கண்டல் அ.த.க. பாடசாலையில் பிற்பகல் 1.30 மணிக்கும், மருதன்குளம் பழைய முறிகண்டிக் குளம், ஐயன்கன்குளம் ஆகிய குளங்களில் கீழ் நெற் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு தேறான் கண்டல் அ.த.க. பாடசாலையில் பிற்பகல் 2.30 மணிக்கும் நடைபெறவுள்ளது.

கோட்டைக்கட்டியகுளம், அம்பலப்பெருமாள் குளம், தென்னியன்குளம் ஆகிய குளங்களின் கீழ் நெற் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு கோட்டைகட்டியகுளம் அ.த.க. பாடசாலையில் பிற்பகல் 3.30 மணிக்கும் நடைபெறவுள்ளது.

மேலும் கல்விளான்குளத்தின் கீழ் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு கல்விளான்குளம் அ.த.க. பாடசாலையில் பிற்பகல் 4.30 மணிக்கும், மல்லாவிக் குளத்தின் கீழ் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு மல்லாவி பொதுநோக்கு மண்டபத்தில் பிற்பகல் 5.00 மணிக்கும், பனங்காமன்குளத்தின் கீழ் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு பனங்காமம் அ.த.க. பாடசாலையில் பிற்பகல் 5.30 மணிக்கும் நடைபெறவுள்ளதாக வவுனிக்குளப் பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளர் செ. சுதாகரன் அறிவித்துள்ளார். (உ-121)

## கட்டடத் திறப்பு விழா

கிளிநொச்சி அக்கராயன் அ.த.க. பாடசாலையின் புதிய கட்டடத் திறப்பு விழா எதிர்வரும் 14ஆம் திகதி நடைபெறவுள்ளது. யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமாரினால் அடிக்கல் நாட்டி ஆரம்பித்து வைக்கப்பட்ட இக கட்டடப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளதை அடுத்தே இக்கட்டடம் திறந்து வைக்கப்படவுள்ளது. (உ-121)

## பருத்தித்துறை கோட்ட மட்ட ரீதியான வாய்பாட்டு மனனப் போட்டி முடிவுகள்

(பருத்தித்துறை)

பருத்தித்துறைக் கோட்ட ஆரம்பப்பிரிவு பாடசாலை மாணவர்களுக்கிடையே நடைபெற்ற வாய்பாட்டு மனனப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது. இப்போட்டியில் முதல் ஐந்து இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு:

தரம் 3: இ. விதுஷன் (யாழ். தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை), ச. முகுந்தன் (யாழ். தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம்), ந. அனுஷன் (யாழ். பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம்), ம. மேரி செபஸ்ரிகா (யாழ். கற்கோவளம் மெ.மி.த.க.பாடசாலை), செ. கோட்டீஸ்வரன் (யாழ். தட்டாதெரு மெ.மி.த.க.பாடசாலை) மூவர் இரண்டாமிடம்.

தரம் 4 : ஏ. மயூரி (யாழ். வல்வெட்டித்துறை றோ.க.த.க.பாடசாலை), ஜெ. சயானந் (யாழ். தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை), ஜெ. சர்மினி (யாழ். வடஇந்து மகளிர் கல்லூரி), ஆ. துசாந்தினி (யாழ். புற்றளை மகாவித்தியாலயம்), பா. தக்சனா (யாழ். தும்பளை சிவப்பிரகாச ம.வி.)

தரம் 5 : இ. சாகித்தியா (யாழ். பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம்), யோ. சஜீவன் (யாழ். தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலை), ர. கம்சிகா (யாழ். மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம்), வி. கோகுலமாதவன் (யாழ். புற்றளை மகா வித்தியாலயம்), அ. யூடிற்டிலைக்சனா (யாழ். புலோலி கிழக்கு அ.த.க. பாடசாலை), சி. சிவப்பிரியா (யாழ். தட்டாதெரு மெ.மி.த.க.பாடசாலை) (உ-109)

# சிறார்களின் நிறைவான கல்வியே எதிர்கால சமூகத்திற்கு அத்திவாரம்

## - நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார்



(கிளிநொச்சி)

எமது சமூகத்தின் எதிர்கால வளர்ச்சி என்பது தற்போதுள்ள சிறார்களின் நிறைவான வளர்ச்சியிலேயே தங்கியுள்ளது என ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சி உருத்திரபுரம் புனித பற்றிமா முன்பள்ளி சிறார்களின் விளையாட்டுப் போட்டி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், யுத்தம் எமது சமூகத்தின் இளம் தலைமுறையில் பெரும் இடைவெளியை ஏற்படுத்தியுள்ளது. இந்த இடைவெளியின் தாக்கம் அடுத்து வரும் பத்தாண்டுகளில் எம் சமூகத்தின் இனவிருத்தியில் நன்றாகவே புலப்படும். எனவேதான் எதிர்கால எமது சமூகம் தலை நிமிர்ந்த அபிவிருத்தி அடைந்த சமூகமாக மிளிர வேண்டுமென்றால் தற்போது வட மாகாணத்தில் உள்ள நாற்பதாயிரத்திற்கு மேற்பட்ட முன்பள்ளி சிறார்களை சிறந்த கல்விமான்களாக நற்பிரஜைகளாக வளர்த்தெடுக்க வேண்டும். அதற்கு பெற்றோர் உள்ளிட்ட எம் சமூகத்தின் அனைத்து தரப்பினர்களும் ஒத்துழைக்க வேண்டும். மேலும் பசுமரத்து ஆணிபோன்று பதிகின்ற சிறார்களின் மனங்களில் இன்றிலிருந்தே நல்ல கருத்துக்களை விதைக்க வேண்டும். அதனூடாக நல்ல ஒழுக்கமுள்ள சமூதாயமாக அவர்களை வளர்த்தேடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

அருட்ச் சகோதரி மாசில்லா குருஸ் தலைமையில் நடந்த நிகழ்வில் புனித பற்றிமா பாடசாலையின் முதல்வர் அருட்ச்சகோதரி அன்ரனிற்றா மார்க், கிராம சேவையாளர்களான திருமதி சாரதா சுந்தரலிங்கம்,சிம்சன்போல்,அக்கராயன் மகாவித்தியாலய அதிபர் திரு கண்ணபிரான் மற்றும் அருட்ச் சகோதரிகள் முன்பள்ளி ஆசிரியர்கள் பெற்றோர்கள் என பலர் கலந்துகொண்டனர்.



உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு கரவெட்டி அஞ்சல் அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்ற அஞ்சல் தின நிகழ்வில் மரநடுகை நிகழ்வு இடம்பெறுவதை காணலாம்.(116)

# சீர் செய்யப்படும் படகுச் சேவை

(நெடுந்தீவு)

நெடுந்தீவுக்கும் குறிகட்டுவானுக்கும் இடையிலான பயணிகள் போக்குவரத்து படகுச் சேவைகள் த்ற்போது ஓரளவு சீரடைந்து காணப்படுகின்றன.

குமுதினி, வடதாரகை மற்றும் நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான படகு என்பன சேவையில் ஈடுபட்டு வருகின்றன. இந்தப் படகுகளின் சேவையால் நெடுந்தீவுக்கான கடல் மார்க்கப் பயணம் தற்போது சீரடைந்து காணப்படுகின்றது. (வி)

# மந்தகதியில் கட்டடவேலைகள் மழைக்கு முன்னர் பூரணப்படுத்தவும்

## - பொது மக்கள் கோரிக்கை

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் மக்கள் மீளக் குடிமயர்ந்தபின் ஆரம்பிக்கப்பட்ட அரச அலுவலகங்கள் அமைப்பதற்கான கட்டட வேல்லைகள் மந்த கதியிலேயே நடைபெற்று வருகின்றன. அதிலும் பொது மக்களுக்கு மிகவும் அத்தியாவசியதேவையாகவுள்ள மருதன் கேணி அரசினர்வைத்தியசாலைக், கட்டடங்கள் புனரமைக்கும் பணிகள் முற்றாக நிறுத்தப் பட்டுள்ளன.

இவ் வைத்தியசாலையின் பிரசவ விடுதி மட்டமே கூரைபோடப்பட்ட நிலையிலுள்ளது. மிகுதி எந்த வேலைகளும் நடைபெறவில்லை இரண்டு நோயாளர் தங்கும் விடுதிகள் வெளிநோயாளர் பகுதி மற்றைய வேலைகள் எதுவும் ஆரம்பிக்கப்பட்டவில்லை. இதனால் இப்பிரதேச மக்கள் வைத்திய வசதிகளைப்பெறுவதில் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

ஆகவே இவ் வைத்தியசாலைக்கட்டடத்தை புனரமைப்புச் செய்து மக்கள் பாவனைக்கு விட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை மேற்கொள்வதுடன் இப்பிரதேசத்தில் மந்த கதியில் அமைக்கப்பட்டுவரும் அனைத்து அரச கட்டடங்கள் கூட்டுறவுச் சங்கக் கட்டடங்களை மழைகாலத்திற்கு முன்னர் அமைத்து முடிக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டுமென பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (70)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

**(10.10.2011 – திங்கட்கிழமை)**

பஞ்சாங்கக் குறிப்புக்கள்
கர வருஷம்
புரட்டாதி 23 ஆம் நாள்.
இராகுகாலம் 7.32–9.02, சுபநேரம் 12.02 –01.32,
நட்சத்திரம்: புரட்டாதி பி.ப.3.00 வரை
திதி: சதுர்த்தசி பி.இ. 5.58வரை
நடேசர் அபிஷேகம்

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:–** பணக் கஷ்டம், குடும்பக்கவலை, மனக் குழப்பம், தொழில் முடக்கம் வீண் அலைச்சல்

**ரிஷபம:–** குடும்பத்தில் மகிழ்ச்சி, பணம் வரும் சகோதரபாசம், சுபகாரியச் செலவு, மூத்தோர் ஆசி.

**மிதுனம் :–** பணக் கஷ்டம், பயண நன்மை, முகம் கோணுதல், வீண் கவலை, தேக சுகம் பாதிப்பு.

**கடகம்:–** குடும்பத்தில் மகிழ்ச்சி, பணம் வரும் தொழில் விருத்தி, தவறான முடிவு, கடின வார்த்தை.

**சிம்மம்:–** பணமுடை, வீண் அலைச்சல், தொழில் முடக்கம், இனசன உதவி, கடவுள் வழிபாடு

**கன்னி :–** குடும்பத்தில் மகிழ்ச்சி, பணம் வரும், எதிர்பாராத வரவு, மேலோர் பாராட்டு, தேக ஆரோக்கியம்.

**துலாம் :–**பணமுடை, குடும்பத்தில் கவலை, தேக சுகம் பாதிப்பு, மருத்துவச் செலவு, வீண் சந்தேகம்.

**விருச்சிகம்:–** குடும்பத்தில் மகிழ்ச்சி, பணம் வரும் இனசன அழைப்பு, மூத்தோர் ஆசி, தொழில் விருத்தி.

**தனுசு:–** பணம் வரும் விபத்து வரலாம், குடும்பத்தில் கவலை, இனசன அழைப்பு, தானதர்மம்.

**மகரம:–** குடும்பத்தில் கவலை, பணக் கஷ்டம், சகோதரர் பகை, அவசர முடிவு, வாக்குவாதம்.

**கும்பம் :–** பணம் வரும், வீண் அலைச்சல், குடும்பத்தில் கவலை, மருத்துவச் செலவு, உடல்சுகம் பாதிப்பு.

**மீனம் :–** குடும்பத்தில் கவலை, பணமுடை, வாக்குவாதம், விபத்து வரலாம். தொழில் முடக்கம்.

# நான்கு பாடசாலைகளுக்கு ஆளுநரால் நிதி ஒதுக்கீடு

(வலிகாமம்)

அராலிப்பகுதியில் மிகவும் பின் தங்கிய நிலையில் காணப்படும் நான்கு பாடசாலைகளின் அபிவிருத்திக்குத் தலா 2 மில்லியன் ரூபா வீதம் ஆளுநரால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.


அராலி அ.த.க. பாடசாலை அராலி கிழக்கு ஏ.ரி.எம்.எஸ். அராலி இந்துக்கல்லூரி, அராலி வள்ளியம்மை ஞாபகார்த்தப்பாடசாலை, ஆகிய நான்கு பாடசாலைகளே அபிவிருத்திக்கென தெரிவு செய்யப்பட்டுள்ளன. இப்பாடசாலைகளின் கட்டடத் தேவ்வைகளை பூர்த்தி செய்யும் பொருட்டே இந் நிதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பாடசாலைகளின் கட்டடத் தேவைகளிற்கு ஏற்ப மேலும் நிதி வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (உ-6)

# ஐரோப்பிய திரைப்பட விழா

(கொழும்புத்துறை)

ஐரோப்பியனின் சிறுவர் மற்றும் இளைஞர் திரைபபட விழா எதிர்வரும் 14,15, 16,ஆம் திகதிகளில் யாழ். திருமறைக்கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளது. இத்திரைப்பட விழாவில் பரிஸ்ரோன் இயக்கிய (sniff the Dog) பிரியந்த கொலம்- பகே இயக்கிய (Fancy rains) சில்வான் கோமே இயக்கிய (the illusionist) மிசேல் ஒசலோ இயக்கிய (princess and princesses அலோ சான்றோ அஞ்சலினி இயக்கிய (Raise your head பிரெடி எம் முறே இயக்கிய Vitus) ஆர்னே பேக் கென்ஸ் ரொக் இயக்கிய tha daughter of the Elephant whisperer) ஆகிய திரைப்படங்கள் எதிர்வரும் வெள்ளி, சனி, ஆகிய தினங்களில் முற்பகல் 10.30 பிற்பகல், 1.30, 3.30 ஆகிய நேரங்களில் ஆங்கில மொழியில் இலவசமாகக் காண்பிக்கப்படவுள்ளது. (105-52)



# பாமர் சங்கமம்

மின்சாரம் ஒரு அத்தியாவசிய மார்க்கமா? இல்லை எண்டுதான் நான் சொல்லுவன்,

ஏனெண்டா மின்சாரம் இல்லாமல் வாழ்ந்திருக்கிறம்;வாழ்கிறம்: வாழலாம்.

யாழ்ப்பாணத்தில உந்த மின்சாரம் ஒரு நாளைக்கு எத்தின தடவை நிக்குது? வருகுதுபோகுது; போகுது வருகுது.

இது என்ன மின்சாரமா? மின்னலா? அப்படியொரு சந்தேகம் எனக்குள் வந்து போவதுண்டு.

மின்சாரம் இல்லாமல் வாழலாமெண்டதுக்கு இரண்டு கருத்து இருக்க முடியாது. குடாநாட்டில புலிகள் ஆட்சிநடத்தின காலத்தில மின்சாரமே இருந்தது? நகரப்பகுதயில மட்டும் அவர்கள் மின்விநியோகம் செய்ததை மறந்துவிட முடியுமா?

என்றாலும் ஏனைய பகுதிகளில் மின்சாரம் இல்லாமல் மக்கள் பல நாட்களல்ல! பல வருடங்கள் வாழ்ந்தார்கள்.

குடாநாட்டைப் பொறுத்த அளவில் எண்டில்லை வன்னி மற்றும் தென்பகுதி மலையகங்களிலும் எத்தனை குக்கிராமங்கள் மின்சாரம் இல்லாமல் இயங்குகின்றது.

கொழும்பெண்டால் ஒரு அரைமணிநேரம் கூட மின்சாரம் இல்லாமல் வாழேலாதுதான். அந்தளவுக்கு அங்கை இலத்திரனியல் உபகரணங்கள் மக்கள் பாவனையில் உள்ளது.

கிட்டத்தட்ட யாழ்ப்பாணமும் இப்ப அந்தமாதிரித்தான் மாறிக் கொண்டு வருகுது. தொழில் சார், கல்விசார், பொழுதுபோக்கு உபகரணங்கள் எல்லாமே மின்சாரத்தில் தான் இயக்கப்படுகுது.

'மின்சாரம் தடைப்படுவதால் மாணவர்களின் கல்வி கேள்விக்குறியாகிறது. என்ற கூப்பாட்டை பத்திரிகைகள் வாயிலாக விடுத்தபோதும் அது மட்டுமா பாதிக்கப்படுகிறது? அது வொரு பெறுமதியான ஒன்று. என்பதால் சுலோகமாக அதைத் தூக்கிக் கொண்டாலும்: அடிமனதில் தொழில் செய்து ரெண்டு காசைக்காணும் தொழில்கள் முடங்குகிறது எண்ட கவலை எத்தின பேருக்கு வரும்?

தொலைக்காட்சிப் பெட்டியில் மெகாசீரியலைப் பாக்க முடியவில்லையே எண்ட உறுத்தலே மேலெழுந்து நிக்கும்.

உந்த மின்சாரத்தைப் பற்றிப்பேச வந்து நானெங்கையோ எல்லாம் போயிட்டன்.

வீதிகளை அகலமாக்குவதற்காக மின் கம்பங்களை அகட்டிப் போட எண்டு தொடங்கிய மின்வெட்டுகள் ஏதோ விளையாட்டுக்கு நடத்துவது போலாகி விட்டதுதான் நிலைமை.

ஒரு வேலையை பத்து நிமிடங்களில செய்ய முடியுமா? பத்து நிமிடம் தடைப்படும் மின்சாரம் மறு பத்து நிமிடம் சேவையில் இருக்கும்.

இது சமீபகாலமாக யாழ்.குடாநாட்டு மின்விநியோகத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் விந்தையாகும். இது ஏனிப்படி நடைபெறுகிறதென்பதைச் சிந்திக்கக் கூடிய, அதனைத் தடுத்து நிறுத்தக்கூடிய அதிகாரிகளுக்கும் தட்டுப்பாடோ, தடை ஏதும் நிகழ்ந்து விட்டதா?

அதிக கூர் முழுமொட்டை என்பதுபோல் காலப் போக்கில் மின்சாரமே இல்லாத வாழ்கைக்குத் தள்ளப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லைத்தானே...

## சிறப்புற இடம்பெற்ற இலங்கை வங்கி ஊழியர்களுக்கான வருடாந்த விளையாட்டு

# கால்பந்தில் வடமாகாணம் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி ஊழியர்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டியின் இறுதி நிகழ்வு நேற்று யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் சிறப்புற நிறைவுற்றது.

கால்பந்து, வலைப்பந்து, கரப்பந்து, ஆண், பெண்களுக்கான கிரிக்கெட், எல்லே மற்றும் வாடிக்கையாளர்களையும் பொதுமக்களையும் ஒன்றிணைக்கும் நிகழ்வாக யாழ். மாவட்ட இளைஞர்களுக்கிடையிலான 90 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டி என்பன இடம்பெற்றது.

கால்பந்து இறுதிப் போட்டி வங்கியின் தலைமையக அணிக்கும் வடமாகாண அணிக்கும் இடையில் இடம்பெற்றது. இதில் சிறப்பாக ஆடிய வடமாகாண அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது. கடந்த வருடம் இடம்பெற்ற கால்பந்துத் தொடரிலும் வடமாகாண அணி சம்பியன் பட்டம் வென்றமை குறிப்பிடத்தக்கது.

ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் வடமத்திய மாகாணமும், வடமேல் மாகாணமும் மோதின. இதில் வடமத்திய மாகாணம் சம்பியனானது.

பெண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் வடமேல் மாகாண அணியும், தென் மாகாண அணியும் மோதின. இதில் வடமேல் மாகாணம் சம்பியனானது.

வலைப்பந்துப் போட்டியில் மேல் மாகாண அணியும் மத்திய மாகாண அணியும் மோதின. இதில் தென் மேல் மாகாண அணி சம்பியனானது.

ஆண்களுக்கான கரப்பந்துப் போட்டியில் வடமேல் மாகாண அணியும், தென் மாகாண அணியும் மோதின. இதில் வடமேல் மாகாணம் சம்பியனானது.

பெண்களுக்கான கரப்பந்துப் போட்டியில் வடமேல் மாகாண அணியும் மேல் மாகாண அணியும் மோதின. இதில் வடமேல் மாகாண அணி சம்பியனானது.

இப்போட்டி நிகழ்வில் 500 இற்கும் மேற்பட்ட வங்கி ஊழியர்கள் பங்குபற்றியிருந்தனர்.

இப்போட்டி நிகழ்வில், இலங்கை வங்கியின் பொது முகாமையாளர் திருமதி டபிள்யூ ஏ. நளனி மற்றும் இலங்கை வங்கியின் தலைவர் டாக்டர் காமினி விக்கிரமசிங்க, இலங்கை வங்கி உயர் அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், இலங்கை வங்கி வாடிக்கையாளர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இறுதியில் கலைநிகழ்ச்சியும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(எப்.எஸ்).





சண்முகலிங்கம், எட்வேட் எடின் கௌரவிக்கப்பட்டபோது...

## விளையாட்டில் பெருமை சேர்த்த வீரர்கள் கௌரவிக்கப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் ஊழியர்களின் வருடாந்த விளையாட்டின் போது விளையாட்டின் மூலம் வடமாகாணத்திற்குப் பெருமை சேர்ந்த 16 வீர, வீராங்கனைகள் கௌரவிக்கப்பட்டதுடன், வங்கியில் அதிக சேமிப்புக் கணக்கினை வைத்திருந்த வடமாகாணத்தைச் சேர்ந்த பத்துப் பாடசாலைகளுக்கு தலா 25,000 ரூபா வீதம் வழங்கப்பட்டது.

25,000 ரூபா நிதியைப் பெற்றுக் கொண்ட பாடசாலைகளின் விபரம் வருமாறு:

ரம்பைக்குளம் அரசினர் மகாவித்தியாலயம், வவுனியா விபுலானந்த மகாவித்தியாலயம், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, யாழ். இந்து பெண்கள் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, இணுவில் மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகள் பெற்றுக் கொண்டன.

இதில் கௌரவிக்கப்படவுள்ளோர் விபரம் வருமாறு:

கனிஷ்ட பிரிவு:

எஸ். மயூரன் (கால்பந்து), ஆர். எட்வேட் எடின் (கிரிக்கெட்), பி. புகழரசி (கரப்பந்து), ஏ. அமிர்தராஜ் (மல்யுத்தம்), எஸ். தனுசா (தடகளம்), வி. ஹரிகரன் (தடகளம்), எஸ். தர்சினி (கூடைப்பந்து), எஸ். வாசிசன் (வலைப்பந்து)

சிரேஷ்ட பிரிவு:

எஸ். மரியதாஸ் (கால்பந்து), எம். பிரதீப்குமார் (தடகளம்), எஸ். சாந்திகரன் (வலைப்பந்து), வி. கே. சண்முகலிங்கம் (கிரிக்கெட்), ஏ.எப்.கே. ரூபசிங்கம் (கூடைப்பந்து), இ. ஏகாம்பரம் (கரப்பந்து), சி. அண்ணாத்துரை (விளையாட்டு நிர்வாகம்), கே. யதுகுலசிங் (அனைத்து விளையாட்டு சிறப்பு ஆளுமை)

# நவோதயா பாடசாலை விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

நவோதயா பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 14ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளதாக வடமாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே. சத்தியபாலன் தெரிவித்துள்ளார்.

போட்டிகள் காலை 8.30 மணியிலிருந்து நடைபெறும் என்றும், இதில் பெண்களுக்கான வலைப்பந்து மற்றும் ஆண்களுக்கான கரப்பந்துப் போட்டிகளுடன் அஞ்சலோட்டப் போட்டியும் இடம்பெறும் எனவும் அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறுவதற்கான சகல ஏற்பாடுகளும் நிறைவுற்றதாகவும் இப்போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள வீர, வீராங்கனைகளை குறித்த நேரத்திற்கு சமுகம் தந்து போட்டி சிறப்புற நடைபெற ஒத்துழைப்புத் தருமாறும், போட்டிக்கு நடுவர்களாகக் கடமையாற்றவுள்ளோரையும் குறித்த நேரத்திற்கு வருகை தருமாறும் அவர் கேட்டுக் கொண்டார். (12)

# மாவட்ட மட்ட கூடைப்பந்து ஜொலிஸ்ரார் அணி வெற்றி




(யாழ்ப்பாணம்)

சர்வதேச லயன்ஸ் கழகம் 301 V ஆதரவுடன் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம் நடத்தும் கூடைப்பந்தாட்டத் தொடரின் முதல் போட்டியில் ஜொலிஸ்ரார் அணி வெற்றிபெற்றுள்ளது.

இப்போட்டி நேற்று முன்தினம் யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்ட மைதானத்தில் நடைபெற்றது.

இதில் ஜொலிஸ்ரார் அணியும், பற்றீசியன்ஸ் அணியும் மோதின. இரு அணிகளும் ஆரம்பம் முதல் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்தது.

இறுதியில் ஜொலிஸ்ரார் அணி 41-37 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது.

இன்றைய தினம் இடம்பெறவுள்ள போட்டியில் 'ஏ' பிரிவில் இடம்பெற்ற சென்றலைஸ் அணியை எதிர்த்து கே.கே.எஸ். அணி மோதவுள்ளது. (93)

# நட்புறவு கால்பந்து

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணிகளுக்குமிடையிலான நட்புறவு கால்பந்துப் போட்டி நாளை நடைபெறவுள்ளது.

வயது அடிப்படையில் இடம்பெறவுள்ள இப்போட்டி தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

14, 16, 18, 21 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் இப்போட்டி இடம்பெறவுள்ளது.

இரு அணிகளும் சம பலம் வாய்ந்த அணி என்பதால் விறுவிறுப்பான வகையில் போட்டிகள் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (93)

# பிரிமியர் லீக் கால்பந்து ஊரெழு றோயல் தோல்வி

(வவுனியா)

பிரிமியர் லீக்கின் பிரிவு மூன்றிற்கான கால்பந்துப் போட்டி ஒன்றில் ஊரெழு றோயல் அணி தோல்வியடைந்துள்ளது.

இலங்கை கால்பந்துச் சம்மேளனத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிமியர் லீக்கின் பிரிவு மூன்றிற்கான போட்டி ஒன்று நேற்று முன்தினம் வவுனியா நகர சபை மைதானத்தில் நடைபெற்றது.

இதில் ஊரெழு றோயல் அணியும், திருகோணமலை சென் அன்ரனீஸ் அணியும் மோதின.

இதில் முற்பாதி ஆட்டத்தின் 17ஆவது நிமிடத்தில் திருகோணமலை சென் அன்ரனீஸ் அணி வீரரால் ஒரு கோல் போடப்பட்டது. முற்பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை 1-0 என்ற கோல் கணக்கில் சென் அன்ரனீஸ் அணி முன்னிலை பெற்றிருந்தது.

பிற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல் போடும் முயற்சியில் மிகத் தீவிரமாக ஈடுபட்டபோதிலும் அது சாத்தியமாகவில்லை. இறுதியில் 1-0 என்ற கோல் கணக்கில் திருகோணமலை சென் அன்ரனீஸ் அணி வெற்றிபெற்றது.

ஏற்கனவே, இரு அணிகளுக்குமிடையில் இடம்பெற்ற போட்டி வெளிச்சமின்மை காரணமாக கைவிடப்பட்ட நிலையில் மீண்டும் நேற்று முன்தினம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (12)



இலங்கை ரென்னிஸ் சங்கத்தினால் நடத்தப்பட்ட தேசிய மட்ட ஓரெஞ் போல் ரென்னிஸ் போட்டியில் நான்காமிடத்தைப் பெற்றுக் கொண்ட சென் பற்றிக்ஸ் கல்லூரி வீரர்கள், கல்லூரி அதிபர், பயிற்றுநர்களுடன் நிற்பதைக் காணலாம். (20)

# விரைவில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை பாடசாலைக் கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்படவுள்ள 13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஒரு நாள் கிரிக்கெட் தொடர் விரைவில் ஆரம்பமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தின் பிரிவு மூன்றில் உள்ள அணிகளுக்கிடையில் இடம்பெறவுள்ள இப்போட்டிகள் இம்மாதம் இறுதிப் பகுதியில் ஆரம்பமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரிவு மூன்றின் 15 மற்றும் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டித் தொடர் நிறைவடைந்துள்ள நிலையில் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பிரிவு மூன்றின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் சென் ஜோன்ஸ் கல்லூரி அணி அரையிறுதிப் போட்டி வரை முன்னேறியது.

# சிலியை வென்றது ஆர்ஜென்ரீனா



(பியுனஸ் ஏர்ஸ்)

உலகக் கிண்ணக் கால்பந்துத் தொடரின் தகுதிச் சுற்றுப் போட்டியில், ஆர்ஜென்ரீனா அணி அபார வெற்றி பெற்றது.

2014 உலகக் கிண்ணக் கால்பந்து தொடர் பிரேசிலில் நடைபெறவுள்ளது. இதில் பங்கேற்கவுள்ள தென் அமெரிக்க நாடுகளுக்கான தகுதிச் சுற்றுப் போட்டி ஒன்றில் நேற்று முன்தினம் ஆர்ஜென்ரீனாவின் பியூனஸ் ஏர்சில் நடந்தது. இதில் ஆர்ஜென்ரீனா, சிலி அணிகள் மோதின.

தொடக்கத்தில் இருந்தே ஆர்ஜெனரீனா அணியினர், அசத்தல் ஆட்டத்தை வெளிப்படுத்தினர். போட்டியின் 7ஆவது நிமிடத்தில் ஹிகுயன் முதல் கோல் அடித்தார். 25ஆவது நிமிடத்தில் நட்சத்திர வீரர் மெஸ்ஸி, மற்றொரு கோல் அடிக்க, முதல் பாதியில் 2-0 என ஆர்ஜென்ரீனா அணி முன்னிலை பெற்றது.

தொடர்ந்து இரண்டாவது பாதியிலும் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய ஆர்ஜென்ரீனா அணிக்கு 51, 62ஆவது நிமிடங்களில் மேலும் இரு கோல் அடித்து ஹட்ரிக் சாதனை படைத்தார் ஹிகுயன். சிலி அணி சார்பில் பெர்னாண்டஸ் மட்டும் (59ஆவது) ஒரு கோல் அடித்தார். முடிவில் ஆர்ஜென்ரீனா அணி 4-1 என்ற கோல் கணக்கில் அபார வெற்றிபெற்றது.

## இங்கிலாந்து தகுதி

(லண்டன்)

யூரோ கிண்ணக் கால்பந்து தொடரில் பங்கேற்க, இங்கிலாந்து அணி தகுதி பெற்றது. இத்தொடருக்கான தகுதிச் சுற்றுப் போட்டியில் நேற்று முன்தினம் மான்டனேகுரோ அணியைச் சந்தித்தது. இதில் 11, 31 ஆவது நிமிடத்தில் இங்கிலாந்தின் யங், பென்ட் தலா ஒரு கோல் அடித்தனர். மான்டனேகுரோ அணிக்கு எல்சட் (45ஆவது), டெலிபேசிக் (90ஆவது) ஆகியோர் கோல் அடிக்க, போட்டி 2-2 என்ற கணக்கில் சமனிலையானது.

இதையடுத்து 8 போட்டியில் பங்கேற்று 18 புள்ளியுடன், ஜி பிரிவில் முதலிடம் பெற்ற இங்கிலாந்து அணி 2012 யூரோ கிண்ணக் கால்பந்துத் தொடரில் விளையாட தகுதிபெற்றது.

## சீன ஓப்பன் ரென்னிஸ் தொடர் ரட்வன்ஸ்கா, பெட்கோவிக் மோதல்





(பீஜிங்)


சீன ஓப்பன் ரென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் ரட்வன்ஸ்கா, பெட்கோவிக் ஆகியோர் மோதவுள்ளனர்.


அரை இறுதியில் இத்தாலியின் பிளாவியா பென்னட்டாவுடன் நேற்று முன்தினம் மோதிய ரட்வன்ஸ்கா 6-2, 6-4 என்ற நேர் செட்களில் வென்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

மற்றொரு அரை இறுதியில் ரோமானிய வீராங்கனை மோனிகா நிகுலெஸ்குவுடன் மோதிய ஆண்ட்ரியா பெட்கோவிக் (ஜெர்மனி) 6-2, 6-0 என்ற செட் கணக்கில் எளிதாக வென்றார். இறுதிப் போட்டியில் ரட்வன்ஸ்கா, பெட்கோவிக் மோதுகின்றனர்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் குரோஷியாவின் மரின் சிலிக் 6-4, 6-3 என்ற நேர் செட்களில் சக வீரர் இவான் லுபிசிக்கை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

## நடால், முர்ரே பலப்பரீட்சை





(டோக்கியோ)

ஜப்பான் ஓப்பன் ரென்னிஸ் போட்டியின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் முன்னணி வீரர்களான ரபேல் நடால் (ஸ்பெயின்) மற்றும் ஆன்டி முர்ரே (இங்கிலாந்து) மோதவுள்ளனர்.

டோக்கியோவில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் அமெரிக்காவின் மார்டி பிஷ்ஷுடன் மோதிய நடால் 7-5, 6-1 என்ற நேர் செட்களில் வென்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

மற்றொரு அரையிறுதியில் ஸ்பெயின் வீரர் டேவிட் பெர்ரருடன் மோதிய ஆண்டி முர்ரே 6-2, 6-3 என்ற நேர் செட்களில் எளிதாக வென்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

நடால், முர்ரே இருவரும் பல போட்டிகளில் மோதியுள்ளனர். இவை அனைத்திலும் நடாலே வெற்றிபெற்றுள்ளார்.

இந்நிலையில் ஜப்பான் ஓப்பன் ரென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டியில் இருவரும் மோதவுள்ள நிலையில், முர்ரே கடந்த காலத் தோல்விக்குப் பதிலடி கொடுப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நடால் வழமை போன்றே இலகுவாக முர்ரேயை வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொள்வார் என்றும் கருதப்படுகின்றது.

## சமனிலையில் 7ஆவது ஆட்டம்



(சாவோ பாலோ)

பில்பாவ் மாஸ்டர்ஸ் செஸ் தொடரின் ஏழாவது சுற்று ஆட்டத்தை, இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் சமநிலை செய்தார்.

பிரேசிலில் சாவோ பாலோவில் நான்காவது பில்பாவ் மாஸ்டர்ஸ் செஸ் தொடர் நடக்கிறது. ஏழாவது சுற்று போட்டியில் இந்தியாவின் ஆனந்த், அமெரிக்காவின் ஹிகாரு நகமுராவை எதிர்கொண்டார். இதில் வெள்ளை காய்களுடன் விளையாடிய ஆனந்த், 36ஆவது நகர்த்தலின் போது போட்டி சமநிலையில் நிறைவுற்றது.

மற்றொரு போட்டியில் உக்ரைனின் இவான்சக், ஸ்பெயினின் பிரான்சிஸ்கோவிடம் அதிர்ச்சித் தோல்வியடைந்தார். உலகின் முதல் நிலை வீரரான நார்வேயின் மாக்னஸ் கார்ல்சன், ஆர்மீனியாவின் லேவான் ஆரோனியன் இடையிலான போட்டி சமநிலையானது.

ஏழாவது சுற்றின் முடிவில், 8 புள்ளிகள் பெற்றுள்ள ஆனந்த், ஆரோனியன், நகமுரா, கார்ல்சன் ஆகியோர் இரண்டாவது இடத்தில் நீடிக்கின்றனர். முதலிடத்தில் இவான்சுக் (13) உள்ளார்.

## 2015 உலகக் கிண்ணம் வரை விளையாடுவதே எனது இலக்கு

### கூறுகிறார் இங்கிலாந்து வீரர் பீற்றர்சன்



(ஐதராபாத்)

அவுஸ்ரேலியா, நியூசிலாந்தில் நடைபெறவுள்ள 2015 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் வரை இங்கிலாந்து அணிக்காக விளையாட வேண்டும் என்பது எனது இலக்கு என்று அவ் அணியின் நட்சத்திர வீரர் கெவின் பீற்றர்சன் தெரிவித்துள்ளார்.

டெஸ்ட் போட்டிகளில் அதிக கவனம் செலுத்தி வந்தாலும், மூன்று வகை போட்டியிலுமே தொடர்ந்து விளையாட விரும்புகிறேன். ஓய்வு பெறுவது பற்றி இப்போது சிந்திக்கவில்லை. மூத்த வீரர்களுக்கு சில போட்டிகளில் ஓய்வளிப்பது மிகவும் சரியான முடிவு. இதனால் நல்ல ஓய்வு கிடைக்கிறது. மீண்டும் போட்டிகளில் உற்சாகமாக விளையாட உதவுகிறது. இங்கிலாந்து கிரிக்கெட் சபையின் இந்தத் திட்டத்தை வரவேற்கிறேன்.

2015ல் நடக்க உள்ள உலகக் கிண்ண ஒருநாள் தொடரில் இங்கிலாந்து அணிக்காக விளையாட விரும்புகிறேன். அதற்கேற்ப எனது உடல் தகுதியை பராமரிப்பதுடன், சிறப்பாக விளையாடி அணியில் இடம் பெற முயற்சிப்பேன்.

எனது மணிக்கட்டுக் காயத்துக்காக சில நாட்களுக்கு முன் சிகிச்சை எடுத்தேன். இதற்காக வலி நிவாரணி மருந்துகளை பயன்படுத்தி வருகிறேன். இந்தியாவுக்கு எதிரான கிரிக்கெட் தொடர் முடிந்ததும், இதற்கு முழுச் சிகிச்சை எடுக்க முடிவு செய்துள்ளேன். இந்தியாவுக்கு எதிரான தொடரில் சிறப்பாகச் செயற்படும் நம்பிக்கை உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சானியாவுக்கு அறுவைச் சிகிச்சை



(ஹைதராபாத்)

இந்திய ரென்னிஸ் நட்சத்திரம் சானியா மிர்சாவுக்கு இடது முழங்காலில் நேற்று முன்தினம் அறுவைச் சிகிச்சை நடந்தது.

இது குறித்து சானியாவின் தந்தை இம்ரான் மிஸ்ரா கூறியதாவது: கடந்த மாதம் யு.எஸ். ஓப்பன் ரென்னிஸ் போட்டியில் விளையாடியபோது சானியா இடது முழங்காலில் காயம் அடைந்தார். தொடர்ந்து வலி இருந்ததால், அவருக்கு அறுவைச் சிகிச்சை செய்ய முடிவு செய் யப்பட்டது. ஹைதராபாத்தில் அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடந்தது. கண வர் சோயிப் மாலிக்கும் உடன் இருந் தார். சில வாரங்கள் ஓய்வுக்குப் பின்னர் சானியா மீண்டும் களமிறங்குவார் எனத் தெரிவித்தார்.

சானியாவுக்கு 2006ஆம் ஆண்டு வலது முழங்காலிலும், 2007ஆம் ஆண்டு வலது மணிக்கட்டிலும் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## டாக்காவில் ருவென்ரி 20

(டாக்கா)

மேற்கிந்தியத்தீவுகள், பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான ருவென்ரி 20 போட்டி நாளை நடைபெறவுள்ளது. பங்களாதேஷ் சுற்றுப் பணயத்தை மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத்தீவுகள் அணி ஒரு ருவென்ரி 20 மற்றும் ஒரு நாள் போட்டித் தொடரில் மோதவுள்ளது. இரு அணிகளுக்குமிடையிலான ஒரு ருவென்ரி 20 போட்டி நாளை டாக்காவில் நடைபெறவுள்ளது. இதேவேளை, ஏற்கனவே, நடைபெற்ற பயிற்சிப் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி சிறப்பான வெற்றியைப் பதிவாக்கியுள்ளது. இந்நிலையில் நாளையப் போட்டியில் பங்களாதேஷ் அணிக்கு கடும் நெருக்கடியை மேற்கிந்தியத்தீவு அணி கொடுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## "நாகரீக" திருடர்களை அம்பலப்படுத்துவர் பொலிஸார்

(கொழும்பு)

இலங்கையில் சுமார் 50,000 இற்கும் மேற்பட்ட வைற் கொலர் எனப்படும் நாகரீகமான முறையில் மோசடிகளில் ஈடுபடுவோர் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. கனவான்களைப் போன்று தோற்றமளிக்கும் இவர்கள் பாரியளவில் மோசடிகளில் ஈடுபட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. இவ்வாறான சந்தேக நபர்கள் பற்றிய தரவுகள் ஏற்கனவே திரட்டப்பட்டுள்ளது. வைற் கொலர் குற்றச செயல்களுடன் தொடர்புடைய நபர்கள் பற்றி மக்களுக்கு தெளிவுபடுத்த பொலிஸார் தீர் மானித்துள்ளனர். குற்றச் செயல்களில் ஈடுபடுவோரின் பெயர் விபரங்கள், புகைப்படங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை அம்பலப்படுத்தத் திட்ட மிடப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். வைற் கொலர் குற்றவாளிகளின் சதித் திட்டங்களினால் நாட்டில் வருடாந்தம் 5 பில்லியன் ரூபா பணம் மோசடி செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பட்டியலுக்கான கட்டணம் தபால் நிலையங்களில் செலுத்தலாம்

(கொழும்பு)

தபால் அலுவலகம் மூலம் கட்டணங்கள் செலுத்துவதற்கு புதிய சேவையை எதிர்வரும் டிசம்பர் மாதத்திலிருந்து அறிமுகப்படுத்தத் தீர்மானித்துள்ளதாக தபால் திணைக்களம் அறிவித்துள்ளது. அதற்கு ஏற்ப நீர், மின்சாரம், மற்றும் தொலைபேசிக் கட்டணங்களை நாடு பூராகவுள்ள தபால் அலுவலகங்களின் மூலம் செலுத்துவதற்கு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளதாக தபால் சேவை அமைச்சர் ஜீவன் குமாரதுங்க தெரிவித்தார். அரச மற்றும் தனியார் நிறுவனங்களுடன் இது குறித்து நடத்திய பேச்சுவார்த்தை வெற்றியளித்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

கட்டணச் சிட்டைகள் செலுத்துவதற்கு விசேட அமைப்பு சகல தபால் நிலையங்களிலும் திறப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. 644 தபால் அலுவலகமும், 3408 உப தபால் நிலையங்களும் நாடுபூரா இதுவரைக்கும் செயற்படுகிறது. இதன் மூலம் கட்டணங்களைச் செலுத்துவதற்கான சேவையை செயற்படுத்த முடியும் என எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார் .

## சவேந்திர சில்வாவிற்கு எதிராக வழக்குத் தொடர முடியாது



(கொழும்பு)

மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவிற்கு எதிராக அமெரிக்க நியூயோர்க் மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. எனினும்,1961ஆம் ஆண்டு வியன்னா பிரகடனத்தின் அடிப்படையில் சவேந்திர சில்வாவிற்கு இராஜதந்திர பதவிகளுக்குரிய உரிமைகள் காணப்படுவதாகவும் இதனால் அவருக்கு எதிராக வழக்குத் தொடர முடியாது எனவும் தெரிவிக்கப்படுகிறது. இதனை அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் உறுதி செய்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

முதலில வழக்கு விசாரணைகளை எதிர்நோக்கப் போவதாகத் தெரிவித்த சவேந்திர தற்போது, இராஜதந்திர பதவிகளுக்குரிய உரிமைகளை பயன்படுத்தப் போவதாகத் தெரிவிக்கப்படுகிறது. சவேந்திரவின் சட்டத் தரணிகள் இராஜதந்திர பதவிகளுக்குரிய உரிமைகள் குறித்து நீதிமன்றில் அறிவிக்கவுள்ளனர். அமெரிக்க நீதிமன்றில் சவேந்திரவிற்கு எதிராக அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் 14ஆம் திகதிக்கு முன்னதாக அதற்குப் பதிலளிக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

## தேர்தலில் ஆளும் கட்சி அமோக வெற்றி கொழும்பு மாநகரசபை மட்டும் ஐ.தே.கவிற்கு

(கொழும்பு)

**நடைபெற்று முடிந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களில் பிரதான உள்ளூராட்சிச் சபைகள் பலவற்றை ஆளும் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தன் வசப்படுத்தியது. 23 சபைகளுக்காக நடைபெற்ற தேர்தலில் மாத்தறை, காலி, அம்பாந்தோட்டை, அநுராதபுரம், குருணாகல், நுவரேலியா, பதுளை, கண்டி, இரத்தினபுரி, மாத்தறை, கம்பஹா உள்ளிட்ட பெரும்பாலான சபைகள் ஆளும் தரப்பினர் வசம் வந்துள்ளன. கல்முனை மாநகர சபையை முஸ்லிம் காங்கிரஸ் கைப்பற்றியுள்ளது.**

ஐக்கிய தேசியக் கட்சியின் கோட்டைகள் என வர்ணிக்கப்பட்ட மாநகர சபைகள் சிலவும் ஆளும் தரப்பினர் வசம் சென்றுள்ளது. கொழும்பு மாநகர சபையைத் தவிர வேறு எந்த ஒரு சபையையும் ஐக்கிய தேசியக் கட்சியால் இத் தேர்தலில் கைப்பற்ற முடியவில்லை.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட்ட இரத்தினபுரி மாநகர சபையில் தோல்வியைத் தழுவியுள்ளது. கொழும்பு மாநகர சபையை ஐக்கியதேசியக் கட்சி 24 ஆசனங்களைப் பெற்று தனதாக்கிக்கொண்டது. ஆளும் தரப்பிற்கு 16ஆசனங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

## தேர்தலுக்குப் பின்னரான வன்முறையாளர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

(கொழும்பு)




தேர்தலுக்கு பின்னரான வன்முறைகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கவிருப்பதாக எச்சரிக்கப்பட்டுள்ளது. தேர்தலுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ன இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

தேர்தல்கள் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றங்களில், பாதுகாப்பை வழங்குவதற்காக பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும், இயல்பற்ற சூழ்நிலைகள் ஏற்படுமாயின், பொலிஸாருக்கு மேலதிகமாக இராணுவத்தினர் மற்றம் விசேட அதிரடிப்படையினரின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளவுள்ளதாகவும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

## தேர்தல் தொடர்பான விக்கிலீக்ஸ் தகவலால் அம்பாறை அரசாங்க அதிபர் கடும் அதிருப்தி

(கொழும்பு)




2010ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களின் போது தேர்தல் முடிவுக்ளை முதலில் அலரிமாளிகைக்கு அனுப்பி வைக்குமாறு அம்பாறை அரசாங்க அதிபர் உள்ளிட்ட எட்டு அரசாங்க அதிபர்களுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டிருந்ததாக புட்டினாஸ் தெரிவித்துள்ளார்.

அம்பாறை அரசாங்க அதிபர் தம்மிடம் இதனைக் குறிப்பிட்டதாக புட்டினாஸ் அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்துள்ள கேபிள் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று விக்கிலீக்ஸின இணையத்தில் அண்மையில் வெளியான தகவல்கள் தொடர்பில் அம்பாறை அரசாங்க அதிபர் சுனில் கன்னங்கர கடும் அதிருப்தி அடைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக அமெரிக்கத் தூதுவர் பெட்ரிசியா புட்டினாஸிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அம்பாறை அரசாங்க அதிபர் சுனில் கன்னங்கர தெரிவித்துள்ளார். எவ்வாறெனினும், இந்தக் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை என அம்பாறை அரசாங்க அதிபர் தெரி வித்துள்ளார். தேர்தல் முடிவுகளை அலரி மாளிகைக்கு அனுப்பி வைக்குமாறு எவரும் கோரவில்லை எனவும், அவ்வாறான தகவலை அமெரிக்கத் தூதுவரிடம் தெரிவிக்கவில்லை எனவும் அவர் குறிப் பிட்டுள்ளார். தேர்தல்களுக்கு முன்னதாக அமெரிக்கத் தூதுவரை தாம் சந்தித்த போதிலும் யுஎஸ் எயிட் நிறுவனம் பற்றியும், தேர்தலுக்கான ஆயத்தங்கள் பற்றியுமே கலந்துரையாடியதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, விக்கிலீக்ஸில் வெளியாகும் கருத்துக்கள் தொடர்பில் அமெரிக்க அரசாங்கம் எதுவித கருத்துக்களையும் வெளியிடுவதில்லை என கொள்கை ரீதியான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அமெரிக்காவிற்கான கொழும்புத் தூதரகம் அறிவித்துள்ளது

## சுற்றுலாப்பயணிகளை கண்காணிக்க புதிய இலத்திரனியல் விசா

(கொழும்பு)

எதிர்வரும் 2012ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும புதிய இலத்திரனியல் பயண அங்கீகாரத்துவமானது [Electronic Travel Authorization - ETA] இலவச விசா முறைமைக்குப் பதிலாக அறிமுகமாவதுடன், இது இணையத்தின் ஊடாகவே பெறப்படவேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இப்புதிய திட்டமானது நாட்டிற்குள் வருபவர்களைக் கண்காணிப்பதற்கு உதவும் என சந்தைப்படுத்தல் முகாமையாளர் நபீல் சரீப் தெரிவித்தார். இலங்கை அரசாங்கமானது நாட்டிற்குள் வருகின்ற சுற்றுலாப் பயணிகளைக் கண்காணிக்க விரும்புகின்றது. தற்போது நடைமுறையிலுள்ள முறைமையானது பழமை வாய்ந்ததாகும். நாட்டிற்குள் யார் வருகின்றார்கள் என்பதைக் கண்காணிப்பதற்கான வழிமுறைகள் இதில் காணப்படவில்லை" எனவும் நபீல் சரீப் தெரிவித்தார்.

இலத்திரனியல் போக்குவரத்து அங்கீகாரத்துவ முறைமையின் கீழ் கடவுச் சீட்டின் பிரதிகளோ அல்லது படங்களோ தேவையில்லை எனவும், இது வழங்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்கள் வரை செல்லுபடியாகும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக 50 டொலர் கட்டணமாக அறவிடப்படும்.

## போலிப் பிரசாரத்தால் நாட்டின் நற்பெயருக்கு களங்கம்

(கொழும்பு)

இலங்கைக்கு எதிரான போலிப் பிரசாரங்களினால் நாட்டின் நன்மதிப்பிற்கு களங்கம் ஏற்பட்டுள்ளதாகத் ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான இலங்கை நிரந்தரப் பிரதிநிதி டொக்டர் பாலித கொஹன்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வெளிநாடுகளில் இயங்கி வரும் புலி ஆதரவு அமைப்புக்கள் குறித்து அரசாங்கம் விழிப்புடன் கண்காணித்து வருவதாகவும் குறிப்பிட்டார். யுத்தம் வெற்றிக்கொள்ளப்பட்ட போதிலும் புலி ஆதரவுப் பிரசாரங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதகாக் குறிப்பிடுகின்றார். புலி ஆதரவாளர்கள் பாரியளவு பொருட் செலவில் இலங்கைக்கு எதிராக பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாகவும், சில சர்வதேச நாடுகளின் அனுதாபத்தை திரட்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். செப்டம்பர் 11 தாக்குதல் நடத்தப்பட்டு பத்து ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் உலக தீவிரவாதத்திற்கு எதிராக சர்வதேச நாடுகள் அணி திரள வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தீவிரவாத அமைப்புக்களுக்கு இடையில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்பு இருப்பதாகவும் இதனால் சர்வதேச ரீதியில் கூட்டாக இணைந்து பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.



# பாடக்குறிப்பு- தமிழ் மொழி

**பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்தில் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. "தானந்தவமுயற்சி **தாளாண்மை**-தேனின் கசிவந்த சொல்லியர் மேற் காமுறுதல் பத்தும் பசிவந்திடப் பறந்துபோம்"- இங்கு **தாளாண்மை** என்பதன் ஒத்த கருத்துச் சொல்.
   1. வீரம் 2. முயற்சி 3. வெற்றி 4. கொடை

2. நறுந்தாமரை விரும்பும் நன்னுதலே அன்னாள் அறிந்தாள் நளன்றன்னை ஆங்கு- இங்கு **நுதல** என்பதன் ஒத்த கருத்துள்ள சொல்.
   1. அழகு 2. பெண் 3. மாலை 4. நெற்றி

3. "மனிதர் உணரா இனிமை இரகசியத்தைப் பரிமாறும் காக்கைகள்" **இரகசியம்** என்பதன் எதிர்பொருட்சொல்.
   1. வெளிப்படை 2. தெளிவு 3. பரகசியம் 4. வேவு

4. தன்னை அகழ்பவரையும் தாங்குவது நிலமாகும். **அகழ்தல** என்பதன் எதிர்க் கருத்துள்ள சொல்.
   1. சேர்தல் 2. பிணைத்தல் 3. தூர்த்தல் 4. நெருங்குதல்

5. பாரதியார் பழுத்த தமிழ்ப் புலமை மிக்கவராவார். **புலமை** என்பதன் எதிர்க் கருத்துச் சொல்.
   1. சிறுமை 2. மடமை 3. ஏழ்மை 4. பொறுமை

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

6. அரசரும, செல்வரும் தமக்குக் கீழ்ச் சேவை புரிவோருக்குச் சன்மானமாக வழங்கும் நிலம்
   1. சுயம்பு 2. தரிசு 3. நிந்தகம் 4. மானியம்

7. நகையும் பரிகாசமும் பொருந்தக் கவிபுனையும் ஆற்றல் படைத்தவன்
   1. ஆசுகவி 2. விகடகவி 3. மதுரகவி 4. வித்தாரகவி

8. கலைப்படைப்பொன்றின் குறைநிறைகளை ஆராய்தல்
   1. கண்டனம் 2. பதவுரை 3. ஒப்பீடு 4. திறனாய்வு

9. இலங்கை அரசு தனது பாதீட்டில் பெரும் நிதியை யுத்தச் செலவினங்களுக்காக ஒதுக்கி வந்துள்ளது. பாதீடு என்பது.
   1. வரவுசெலவுத் திட்டம் 2. ஒதுக்குநிதி 3. முதலீடு 4. வருமானம்

10. கல்லிலேனும் செப்பேட்டிலேனும் பொறிக்கப்படும் ஒருவருடைய புகழ்.
   1. மெய்ப்பாடு 2. மெய்க்கீர்த்தி 3. நிறைமொழி 4. கல்லறை

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப்பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**

11. நறவு, தேறல், நறை என்ற சொற்கள் உணர்த்தும் பொருள்
   1. பால் 2. மோர் 3. தேன் 4. நெய்

12. இருபத்தைந்தாவது ஆண்டு இறுதியில் நடைபெறும் விழா.
   1. வெள்ளிவிழா 2. பொன்விழா 3. வைரவிழா 4. பவளவிழா

13. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன.
   1. ஐம்பொறி 2. ஐம்புலன் 3. ஐம்பூதம் 4. பஞ்சசீலம்


14. முத்துக்களின் கூட்டம் குவை எனப்படுவது போல தென்னை மரங்களின் கூட்டம்
   1. தொடர் 2. குழாம் 3. தோப்பு 4. தொகுதி

15. பலா, தோடை என்பவற்றின் உள்ளீடு
   1. சுளை 2. தசை 3. சதை 4. சாறு






ச.சிவலிங்கம்



## க.பொ.த.சா/தரப் பரீட்சை - 2011

நேரம் - 3 மணி

# கல்வி முரசு



**தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் - பகுதி II**

பாழ்.மாவட்டத்திலுள்ள 5 வலயங்களின் ஆசிரிய ஆலோசகர்கள், கற்பித்தல் செயற்பாட்டில் முன்னணியிலுள்ள ஆசிரியர்களால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்

**முதலாம் வினா உட்பட எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக**

01)

i. தரவு தகவல் ஒப்பிடுக?

ii. இலக்கப் பிரிவினை (Digital devide) என்றால் என்ன?

iii. வழிப்படுத்தப்படாத (Unguided media) தரவுத் தொடர்பாடலுக்கு 2 உதாரணங்கள் தருக?

iv. BIOS என்பதன் விரிவாக்கம் யாது?

v. RAM, ROM என்பவற்றின் விரிவாக்கம் யாது?

vi. Unicode code குறிப்பீட்டு முறையை மேம்படுத்தும் இலாப நோக்கற்ற அமைப்பின் பெயர் யாது?

vii. அரை இரு வழிப் போக்குத் தொடர்பாடலுக்கு (Half duplex) உதாரணம் தருக?

viii. $x + 1 = 1$ என்னும் பூலியன் சமன்பாட்டை உண்மை அட்டவணை மூலம் நிறுவிக்காட்டுக?

ix. பணிச் செயன் முறைமையின் அடிப்படைச் செயற்பாடுகள் எவை?

x. கருவி செலுத்திகள் (DEVICE DRIVERS) என்பதற்கு 2 உதாணங்கள் தருக?

02) ஒரு காப்புறுதி நிறுவனமானது தனது வாடிக்கையாளருக்காக வாகன விபத்து காப்புறுதி சேவையை (On the Spot) வழங்குகின்றது. வாகனம் விபத்துக்குள்ளாகும் போது விபத்துப் பற்றி காப்புறுதி சேவை முகாமை யாளரை தொடர்பு கொள்ள வேண்டும். அவர் உடனடியாக விபத்து நடநத இடத்துக்கு வந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வார். இவர்கள் தற்போது கணினித் தரவு முறைமை ஒன்றினைப் பயன்படுத்துவது இல்லை.

i. இவ்சேவையை வழங்குவதற்கு காப்புறுதிச்சேவை முகாமையாளருக்குத் தேவையான தரவுகளைப் பட்டியற்படுத்துக?

ii. விபத்து அறிக்கையை (On the spot) மேலதிக தரவுகளைப்பட்டியற்படுத்துக?

iii. கணினித் தரவு முறைமை ஒன்றைப் பயன்படுத்துவதால் அவர்களுக்கு கிடைக்கும் அனுகூலங்கள் எவை எனக் குறிப்பிடுக?


03) i. கீழே தரப்பட்ட தருக்கச் சுற்று உண்மை அட்டவணை தயாரிக்க?

ii. இவ்வட்டவணையைப் பயன்படுத்தி வெளியீட்டை F எழுதுக?


iii. இவ்வெளியீட்டின் சுருக்கத்தை தருக?

i. $AF5_{16}$ எனும Hexadecimal க்கான Binary, Octal பெறுமானங்களைத் தருக?

ii. A யின ASCII பெறுதமானம் 65 ஆகும். J என்னும் எழுத்துக்குரிய ASSCII பெறுமானம் யாது? இதனை Binary இற்கு மாற்றுக?




**04)** உருவில் காட்டப்பட்டுள்ள பாய்ச்சல் கோட்டுப்படம் யாதேனும் வீச்சிலுள்ள இரட்டை எண்களை காட்சிப் படுத்துகின்றது.




i. இதன் மூலம் காட்சிப்படுத்தப்படும் முதல் 3 எண்களையும் கடைசி மூன்று எண்களையும் எழுதுக?

ii. இதன் போலிக் குறிமுறையை (Pseudo code) எழுதிக் காட்டுக?



iii. 1 – 100 இற்குள் அடங்கலான சகல ஒற்றை எண்களும் காட்சிப்படுத்தப்படும் வகையில் பாய்ச்சல் கோட்டுப் படத்தை மாற்றியமைக்க வேண்டிய விதத்தைக் குறிப்பிடுக?

05) பின்வருவனவற்றில் மூன்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக

1. கணினி விளையாட்டுக்களின் அனுகூலங்களும் பிரதிகூலங்களும்
2. இலங்கையில் சுகாதாரத் துறையை மேம்படுத்துவதற்காக icte ஐப் பயன்படுத்தல்
3. தொடர்ச்சியான கணினிப் பாவனையால் பாவனையாளருக்கு ஏற்படும் உடல் உளப் பிரச்சினைகள்
4. இலங்கையில் தற்போதைய தொடர்பாடல் தொழில்நுட்ப வளர்ச்சி

06) சிவா கணினி ஒன்றை வாங்குவதற்கு விரும்பினான் அவன் இது பற்றி கணினியில் நிபுணத்துவம் உடைய தனது மாமாவிடம் தனது விருப்பத்தைக் கூறினான். அவர் சிவாவை தனக்கு தெரிந்த கணினி விற்பனை நிலையம் ஒன்றிற்கு அழைத்துச் சென்றார். அவர்களுக்கு கணினிகளின் பிந்திய வரவுகள் (Latestt computer details) காட்டப்பட்டன. அதில் ஒன்று பின்வருமாறு அமைந்திருந்தது.

**Processor - core i 3**

**Motherboard - Foxc0"onn**

**Ram - Kinston 2GB (DDR3)**

**Hard disk - Samsung 500GB**

**DVD writer - ASUS lights scribe**

**Monitor - 19" View sonic LCD**

**Mouse - optical**

**VGA - Builtin**

**Sound Buitin**

**Casing - Futura (450 w)**

**Speaker - 800 w**

1. Core i வரிசையிலுள்ள அடுத்த இரண்டு நிரல்படுத்திகளின (Processor) பெயர்களைத் தருக?
2. DDR என்பதன் விரிவு யாது? DDR இற்கு முன் வந்த Ram வகைகளைப் பெயரிடுக?
3. LCD விரிவு யாது?
4. தற்போது LCD monitor மாற்றீடாக வந்துள்ள பிந்திய வரவு யாது?
5. இக்கணினிக்குப் பொருத்தமான பணிச்செயன்முறைமை மென்பொருளைப் பெயரிடுக?
6. CRT Monitor உடன் ஒப்பிடும் போது LCD monitor இன் நன்மைகள் 4 தருக?

# இளம் பெண் கிழவியான விசித்திரம்




வியட்நாம் நாட்டைச் சேர்ந்த இளம் பெண்மணியான Phuong எனும் 26 வயதான அழகிய பெண் தனக்கு ஏற்பட்ட ஒவ்வாமை காரணமாக 70 வயதுப் பாட்டியின் தோற்றத்தை பெற்றுள்ள சோகமான சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-

குறித்த பெண்மணி கடந்த 2008 ஆம் ஆண்டு கடலுணவு வகைகளை அதிகம் சாப்பிட்டுள்ளார். இதன் பின்னர் இவரது முகம் வீங்கி ஒவ்வாமை நிலைக்கு ஆளாகியுள்ளார். இதனால் பெரிதும் பாதிக்கப்பட்ட இவர் தனது 34 வயதான கணவரின் உதவியுடன் வைத்தியரை நாடியுள்ளார். டாக்டர்களின் ஆலோசனைக்கு அமைய ஒவ்வாமை மருந்துகளை தொடர்ச்சியாக உட்கொண்டு வந்துள்ளார்.

இருந்தும் இவரது முகம் மேன்மேலும் விகாரமடை வதை அவதானித்த இவர் இன்னும் பல மூலிகை மருந்துகளையும் உட்கொண்டு பலனளிக்காததால் 2009 ஆம் ஆண்டு தான் பயன்படுத்திய அனைத்து மருந்துகளையும் நிறுத்திக்கொண்டார்.

ஆனால் அதன் விளைவு தற்போது பெண்ணின் உருவம் 70 வயது கிழவி போன்று மாறிவிட்டது.

# கிறிஸ் சாப்பிட்டு ஓயில் குடிக்கும் மனிதன்

வரவர எதைச் சாப்பிடணும் எதைச்சாப்பிடக்கூடாது என்கிற வரைமுறைகூட தெரியாமல் வரம்பு மீறிக்கொண்டே போகிறது. சவுதி ஆரேபிய நாட்டைச் சேர்ந்தவர் மெஹமட் ஓமர். இவர் ஒரு வாகன திருத்த வேலைகள் மேற்கொள்ளும் மெக்கானிக் ஆவார். இவர் தினமும் இரண்டு தொடக்கம் நான்கு கேன்கள் வாகன மோட்டார் ஓயில் குடிக்கின்றார். என்ன அதிர்ச்சியாக இருக்கிற தல்லவா? சவுதி ஆரேபியாவின் பிரபல பத்திரிகை ஒன்று இது தொடர்பாக வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிடபபட்டுள்ளவை பின்வருமாறு:-



குறித்த நபர் தினமும் 2-4 கேன்கள் எஞ்சின் ஓயில் குடிப்பதோடு மட்டும் இன்றி கார்களுக்கு பயன்படுத்தப்படும் கிரீஸை தினமும் 2.5 கிலோ சாப்பிட்டு வருகிறார். இதற்காக இவர் மாதாந்தம் 900 சவுதி றியாத்கள் செலவழிப்பதாக குறிப்பிடுகின்றார். இவரின் இந்த செயற்பாடு மத்திய கிழக்கு நாடுகளில் மட்டும் இன்றி உலகம் எங்கும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதையெல்லாம் சர்வசாதாரணமாக மேற்கொள்ளும் இவரிடம் இது பற்றிக் கேட்டதும். 'வாழ்க அல்லாஹ்'. அவர் என்னை ஆரோக்கியமாக வைத்திருக்கிறார் எனறு இலகுவான பதிலோடு முடித்துக் கொள்ளுகிறார்.


# உலகின் முதலாவது சூப்பர் பஸ்




எமது உள்ளூர் பஸ் சேவைகளில் பிரயாணம் செய்தவர்களுக்கு இது போன்றதொரு பஸ் கிடைத்தால் எப்படியிருக்கும்! 23 பயணிகள் மட்டும் பயணம் செய்யக்கூடிய இந்த பஸ்ஸில் சொகுசுக் கார்களில் பிரயாணம் செய் யும் அனுபவம் ஏற் படும். முன்புறமும், பின்புறமும் பார்பதற்கு கார் போலவே இருந்தாலும் நீளத்தில் புகையிரதம் போன்றது. 49 அடி நீளமான (15 மீற்றர்) இந்த பஸ் 155 kmph எனும் அதியுயர் கதியில் செல்லவல்லது. அத்துடன் தன்னியக்கமாக திறக்கக்கூடிய 8 கதவுகளையும் கொண்டுள்ளது. Holland இலுள்ள University of Technology இல் 1985 ஆம் ஆண்டே இதற்கான வடிவம் வரையப்பட்டதாகவும் இப்போது தான் அது முழுமை பெற்றதாகவும் வடிவமைப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# 7 கால்களுடன் ஆட்டுக்குட்டி

இந்தோனேசியாப் பகுதியில் ஒரு ஆடு 7 கால்களுடன் கூடிய அதிசயக் குட்டியை ஈன்றுள்ளது. குறித்த ஆடு ஒரே தடவையில் இரண்டு குட்டிகளை ஈன்ற போதே ஒரு ஆட்டுக்குட்டி 7 கால்களுடன் பிறந்துள்ளது. எனினும் இவ்விரு ஆடுகளுமே ஆரோக்கியமாக இருக்கின்றனவாம்.



# மனிதக் கழிவு வாயுவில் இயங்கும் வாகனம்



மனிதக்கழிவு வாயுவில் முற்றிலும் இயங்குகின்ற மோட்டார் சைக் கிள்கள் ஜப்பானில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அந்நாட்டின் மலசலகூட உற்பத்திகள் நிறுவனங்களில் ஒன் றான ரோரோவால் இது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஜப்பானில் மலசலகூடங்களிலிருந்து 50 சதவீதமான காபனீரொட்சைட் மாசுகளை 2017 ஆம் ஆண்டுக்கு முன்னர் குறைத்தல் என்கிற திட்டத்தின் கீழ் இம்மோட்டார் சைக்கிள்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இம்மோட்டார் சைக்கிள்களில் இருக்கை காணப்பட வேண்டிய இடத்தில் மலகூட வடிவம் பொருத்தப்பட்டுள்ளது.

# மூளையால் அசையும் செயற்கைக் காதுகள்




மூளையின் செயற்பாட்டுக்கு ஏற்ப அசையும் செயற்கைக் காதுகளை ஜப்பான் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். நாம் உற்சாகமாக இருந்தால் இந்தக் காதுகள் நிமிர்ந்து நிற்கும. தூக்கம் வந்தாலோ, சோர்வு அடைந்தாலோ இவை தொங்கிவிடும். மூளையின் செயற்பாடுகளைக் கண்டறியும் சாதனங்கள் உட்பட பல்வேறு எலக்ட்ரோனிக் கருவிகளை ஜப்பானைச் சேர்ந்த நியூரோவேர் நிறுவனம் தயாரித்து வருகிறது. சமீபத்தில் இவர்கள் கண்டுபிடித்து அறிமுகப்படுத்தியுள்ள கருவி 'நெகோமிமி'. அதாவது நியூரோ கம்யூனிகேஷன் மிமி. மிமி என்றால் ஜப்பானிய மொழியில் பூனையின் காதுகளைக் குறிக்கும்.

இடுப்பு பெல்ட் போல இருக்கும். இதை தலையில் அணிந்து கொள்ள வேண்டும். அதனுடன் பூனைக் காதுகள் போல 2 காதுகள் நீட்டிக் கொண்டிருக்கும். மூளையில் ஏற்படும் அதிர்வுகள், மாற்றங்களை பெல்ட்டில் இருக்கும் மினிக் கருவி பதிவு செய்யும். அதற்கு ஏற்ப காது போன்ற பகுதி செயல்படும். நாம் சுறுசுறுப்பாக இருந்தால் நெகோமிமி காது விறைப்பாக இருக்கும். நமக்கு தூக்கம் வந்தாலோ, சோர்வு அடைந்தாலோ அந்தக் காது தொங்கிவிடும். இதுபற்றி நியூரோவேர் நிறுவனத்தின் ஆய்வுக்குழு உறுப்பினர் கனா நகானோ. கூறுகையில், பள்ளியில் பாடம் நடக்கும்போதே சில மாணவர்கள் தூங்குவார்கள். ஆபீஸ் மீட்டிங்குகளில் தூங்குபவர்களும் உண்டு. சிலரது கண் திறந்திருக்கும். ஆனால் தூங்கிக் கொண்டிருப்பார்கள். அவர்களை நெகோமிமி மூலம் எளிதில் கண்டுபிடித்துவிடலாம். சுவாரஸ்யத்துக்காக இதை உருவாக்கியுள்ளோம். மருத்துவம் உட்பட பல துறைகளில் இந்த வசதியைப் பயன்படுத்துவது குறித்து ஆய்வு மேற்கொண்டு வருகிறோம் என்றார்.

# புதிய ஐ.போன் கவர்கள்!

மேலைத்தேய நாடுகளில் சிறு குழந்தைகளின் கைகளில் கூட இன்று ஐ.போன் காணப்படுவதை அவதானிக்கலாம். அந்தளவுக்கு எல்லோர் கைகளிலும் தவழ்கிறது ஐ.போன். தற்போது ஜ்போனின் அடுத்த பதிப்பான 5 உம் வெளிவர தயாராக உள்ள இச்சந்தர்ப்பத்தில் ஒரு நிறுவனத்தால் இதற்கென வடிவமைக்கப்பட்ட விசேட ஐ.போன் கவர்கள் விற்பனைக்கு வந்துள்ளன. நாம் காதில் வைத்துப்பேசும் இடத்தில் கவரில் காது போன்று அமைப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது. அழகாகவும் வினோதமாகவும் உள்ள இந்த வடிவமைப்புக் கொண்ட ஐ.போன் கவர்கள் அதிகம் விற்பனை ஆகி வருகிறதாம். இனி நீங்களும் காதோடு காதாக ஐ.போன் பேசலாம்.



## இந்தியச் செய்திகள்

# இந்திய மீனவர்களை கச்சதீவுப் பகுதியில் மீன்பிடிப்பதற்கு அனுமதிக்க வேண்டும்

## ஜெயலலிதா வலியுறுத்தல்



(சென்னை)

தமிழக மீனவர்கள் மீது, இலங்கைக் கடற்படை தொடர்ந்து தாக்குதல் நடத்தி, துன்புறுத்தி வருகிறது. இதை இலங்கை அரசிடம் தெரிவிப்பதுடன், பாரம்பரிய உரிமைப்படி கச்சத்தீவுப் பகுதியில் இந்திய மீனவர்கள் மீன்பிடிக்க அனுமதிக்க வேணடும் என்று முதல்வர் ஜெயலலிதா மத்திய வெளியுறவுத்துறை செயலரிடம் வலியுறுத்தியுள்ளார்.

மத்திய வெளியுறவுத்துறைச் செயலர் ரஞ்சன் மத்தாய், மூன்று நாள் பயணமாக இலங்கை வருகிறார். தமிழக மீனவர்கள் பிரச்சினை மற்றும் இலங்கைத் தமிழர்கள் விவகாரம் தொடர்பாக, இலங்கை அரசுடன் ஆலோசனை நடத்தச் செல்லும் அவர் அதற்கு முன்னதாக நேற்று முன்தினம் மாலை தலைமைச் செயலகத்தில் தமிழக முதல்வர் ஜெயலலிதாவை சந்தித்தார்.

அங்கு வெளியுறவுத்துறைச் செயலரிடம் முதல்வர் கூறியதாவது, தமிழக மீனவர்கள் மீது, இலங்கைக் கடற்படை தொடர்ந்து தாக்குதல் நடத்தி துன்புறுத்தி வருகிறது. இந்த அரசு பொறுப்பேற்றது முதல், கடந்த ஐந்து மாதங்களாகத் தொடர்ச்சியாக தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவதும், அவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்படுவதும் என, பல்வேறு சம்பவங்கள் நடந்து வருகின்றன. இலங்கை கடற்படை நடத்தும் தாக்குதல்களை, தமிழக மீனவர்கள் மீது நடத்தப்படும் தாக்குதலாக பார்க்கக் கூடாது. இந்தியக் குடிமக்கள் மீது நடத்தப்படும் தாக்குதலாகத் தான் பார்க்க வேண்டும். இந்தப் பிரச்சினையை, தேசியப் பிரச்சினையாகப் பார்க்க வேண்டும். இந்தப் பிரச்சினையை, இலங்கை அரசிடம் விரிவாக நீங்கள் எடுத்துக் கூற வேண்டும்.

மேலும், இந்திய மீனவர்களின் பாரம்பரிய உரிமைப்படி, கச்சத்தீவு மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதியில் மீன்பிடிப்பதற்கு அனுமதிக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்த வேண்டும். இலங்கைத் தமிழர்கள் அனைவரும், அவரவர் பூர்வீக இடங்களில் குடியேறுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என, இலங்கை ஜனாதிபதி மற்றும் இலங்கை அரசிடம் வலியுறுத்த வேண்டும் என ஜெயலலிதா கூறினார். முதல்வரின் கருத்தை செவிமடுத்த வெளியுறவுத்துறை செயலர், இது பற்றி தான் இலங்கை அரசாங்கத்துடன் கலந்தாலோசிப்பதாகத் தெரிவித்தார்.

## ரம்பாவின் குழந்தைக்கு மாமன் கொடுத்த பரிசு



(சென்னை)

திருமணமாகி கனடாவில் குடியேறிய தமிழர்களின் கனவு தேவதையான ரம்பா தனது எட்டு மாதக் குழந்தையுடன் இந்தியா வந்துள்ளார்.

தனது குழந்தையுடன் இந்தியா வந்துள்ள ரம்பாவிற்கு, ரம்பாவின் அண்ணன் 50 இலட்சம் ரூபா மதிப்புள்ள கார் ஒன்றைப் பரிசாகக் கொடுத்துள்ளார்.


கடந்த ஆண்டு கனடாவில் வசித்து வரும் தொழிலதிபர் இந்திரன் என்ப வரைத் திருமணம் செய்து கொண்டு கனடாவில் குடியேறினார்.

இந்தியா வந்துள்ள ரம்பாவிற்கு அவரது அண்ணனும், தயாரிப்பாளருமான வாசு குழந்தை லான்யாவிற்கு 50 இலட்சம் ரூபாவில் ரெண்ஜோவர்-ஜாகுவார் மொடல் காரைப் பரிசாகக் கொடுததுள்ளார்.

என் குழந்தைக்கு அண்ணா கொடுதத முதல் பரிசை என் வாழ்நாளில் மறக்க முடியாது என ரம்பா கூறியுள்ளார். ரம்பாவின் கணவர் இலங்கை நாட்டைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அ.தி.மு.க.வுக்கு ஆதரவாக பிரசாரம்

## சரத்குமார் முடிவு



(சென்னை)

அ.தி.மு.க.வுக்கு அதரவாக பிரச்சாரம் செய்வதாக சமத்துவ மக்கள் கட்சித் தலைவர் சரத்குமார் தெரிவித்துள்ளார்.

தலைமைச் செயலகத்தில் முதல்வர் ஜெயலலிதாவை அவர் நேற்றுமுன்தினம் மாலை சந்தித்துப் பேசினார். அதன் பின்னர், அவர் நிருபர்களிடம் கூறுகையில்,

திருச்சி மேற்குத் தொகுதி இடைத் தேர்தலில் அ.தி.மு.கவுக்கு ஆதரவாக 10, 11 ஆகிய திகதிகளில் பிரசாரம் செய்ய உள்ளேன். அதேபோல், உள்ளாட்சித் தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவாகவும் பிரசாரம் செய்வேன். அதற்கான பயணத்திட்டம் பின்னர் வெளியிடுவேன். தேர்தல் பிரசாரம் செய்வதற்கு முன்பு முதல்வர் ஜெயலலிதாவை மரியாதை நிமித்தம் சந்தித்துப் பேசினேன்.

கூடங்குளம் அணு மின்நிலையம் பிரச்சினை தொடர்பாக, பிரதமரைச் சந்திக்கச் சென்ற தமிழக அரசு குழுவில் நானும இடம் பெற்றிருந்தேன். பிரதமருடன் சந்தித்தபோது என்ன நடந்தது என்பது குறித்தும், முதல்வரிடம் விளக்கிக் கூறினேன். இவ்வாறு சரத்குமார் கூறினார்.

## உள்ளாட்சித் தேர்தல் களம் தலைவர்கள் தீவிர பிரசாரம்

(சென்னை)

தலைவர்கள் தீவிர பிரசாரத்தால், உள்ளாட்சித் தேர்தல் களம் மீண்டும் சூடு பிடித்துள்ளது.

திருச்சியில் நேற்று முதல்வர் ஜெயலலிதாவும், இன்று தி.மு.க. தலைவர் கருணாநிதியும் பிரசாரம் செய்கின்றனர்.

தமிழகத்தில் உள்ளாட்சித் தேர்தல்கள் எதிர்வரும் 17, 19ஆம் திகதிகளில் நடைபெறுகிறது.

முதல் கட்ட தேர்தல் பிரசாரம் முடிய 6 நாட்களே உள்ளதால், தலைவர்களின் பிரசாரமும், அதைத் தொடர்ந்து வேட்பாளர்களின் பிரசாரமும் சூடுபிடித்துள்ளது.

# பதவியை ராஜினாமா செய்தார் முதல்வர் மம்தா பானர்ஜி



(கொல்கத்தா)

சட்டசபை தேர்தலில் வெற்றி பெற்றதை அடுத்து, மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி முறைப்படி தன் எம்.பி. பதவியை நேற்றுமுன்தினம் ராஜினாமாச் செய்தார். மேற்கு வங்கத்தின் தெற்கு கொல்கத்தா சட்டசபைத் தொகுதி உறுப்பினராக மம்தா பானர்ஜி தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில், சட்டசபைத் தேர்தலில் திரிணமுல் காங்கிரஸ் வெற்றி பெற்றதை அடுத்து, அம்மாநிலத்தின் முதல்வராக பதவியேற்றார். பதவியேற்ற ஆறு மாதத்திற்குள் ஏதாவது ஒரு தொகுதியில் எம்.எல்.ஏ.வாகத் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதால், பொவானிபூர் சட்டசபைத் தொகுதிக்கு நடந்த இடைத்தேர்தலில் போட்டியிட்டார். இதில், 54 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

இதைத் தொடர்ந்து, தெற்கு கொல்கத்தா எம்.பி. பதவியை முறைப்படி நேற்று முன்தினம் அவர் ராஜினாமாச் செய்தார். திரிணமுல் காங்கிரஸ் பொதுச் செயலர் முகுல் ராய், மம்தா பானர்ஜியின் ராஜினாமாக் கடிதத்தை, சட்டசபை சபாநாயகர் மீரா குமாரிடம் அளிக்கவுள்ளதாக திரிணமுல் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

## பாலினம் அறியும் சட்டத்தை மாற்றப் பிரேரணை

(புதுடில்லி)

இந்தியாவில் கருவில் இருக்கும் குழந்தை ஆணா அல்லது பெண்ணா என்பதை கண்டறியும் சோதனை தடை செய்யப்பட்டுள்ள நிலையில், அந்தச் சட்டத்தில் சில தளர்வுகளை ஏற்படுத்த அந்நாட்டின் திட்டக்குழு அரசுக்கு ஒரு பிரேரணையை அனுப்பியுள்ளது.

திட்டக்குழு கருவில் உள்ள குழந்தையின் பாலினத்தை அறிந்து கொள்வதைத் தடை செய்துள்ள சட்டத்தில் சில மாற்றங்களை கொண்டு வந்து, பெண் குழந்தைகளை பெற்றுக் கொள்ளும் தாய்மார்களுக்கு அக்குழந்தைகளை வளர்க்க சில சலுகைகளை வழங்கலாம் எனக் கூறியுள்ளது. இப் பிரேரணைக்கு ஆதவாகவும் எதிராகவும் விவாதங்கள் நடைபெறுகின்றது.

## தனித் தெலுங்கானா விவகாரம்

# சந்திரசேகரராவைக் கொல்லச் சதித்திட்டம் எச்சரிக்கை விடுக்கின்றது உளவுத்துறை

(ஆந்திரா)

ஆந்திராவைப் பிரித்து தனி மாநிலம் அமைக்கக் கோரி தெலுங்கானாவில் தொடர் போராட்டம் நடந்து வருகிறது.

தெலுங்கானா ராஷ்ட்ரீய சமிதி கட்சித் தலைவரும், முன்னாள் மத்திய அமைச்சருமான சந்திரசேகரராவ் தனி மாநிலப் போராட்டத்தைத் தீவிரப்படுத்தி வருகிறார்.

அவருக்கு கடலோர ஆந்திரா, ராயல சீமா பகுதியைச் சேர்ந்தவர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறார்கள். அவரது உருவ பொம்மைகளும் எரிக்கப்படுகின்றன.


இந்நிலையில் சந்திரசேகரராவை கொல்லச் சதித் திட்டம் தீட்டப்பட்டிருப்பதாகவும் அவருக்குக் குண்டு துளைக்காத கார் வழங்க வேண்டும் என்றும் மாநில உளவுத்துறை கூறியுள்ளது.

இதையடுத்து சந்திரசேகரராவுக்கு மாநில அரசு சார்பில் குண்டு துளைக்காத கார் வழங்கப்பட்டுள்ளது. அவரது வீட்டைச் சுற்றி ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

தனி மாநிலம் கோரி தெலுங்கானா அரசு ஊழியர்கள் சார்பில் நடந்த போராட்டத்தில் சந்திரசேகரராவ் பேசும் போது, இன்னும் 2, 3 நாட்களுக்குள் தனித் தெலுங்கானா தராவிட்டால் மீண்டும் சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பேன். தெலுங்கானா மக்கள் ஒற்றுமையாக போராடுவதைப் பார்த்து மத்திய அரசு அதிர்ச்சி அடைந்துள்ளது. எனவே விரைவில் தெலுங்கானா அமையும் என்ற நம்பிக்கை உள்ளது என்றார்.

# ஆளில்லா விமானங்களில் வைரஸ் தாக்குதல்

உலகச் செய்திகள்




அமெரிக்கா ஆளில்லாமல் ரிமோட் கண்ட்ரோல் மூலம் இயங்கும் சிறிய விமானங்களை தயாரித்துள்ளது. இவை முற்றிலும் கணினி மயமாக்கப்பட்டுள்ளது. இந்த விமானங்கள் மூலம் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் ஏமனில் பதுங்கியிருக்கும் தீவிர வாதிகள் மீமு ஏவுகணைகள் வீசு அழிக்கப்பட்டுவருகின்றன.

இந்த நிலையில் ஆளில்லா விமானங்களை இயக்கும் கணினியில் வைரஸ் கிருமிகள் தாக்கி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த கணினி மையம் அமெரிக்காவின் நிவேடாவில் உள்ள கிரீச் விமான படைத் தளத்தில் உள்ளது. இந்தத் தகவல் அமெரிக்காவில் இருந்து வெளிவரும் 'லாஸ் ஏஞ்சல்ஸ் டைம்ஸ்' பத்திரிகையில் வெளியாகியுள்ளது.

இந்த வைரஸ் தாக்குதலால் ஆளில்லா விமானங்கள் இயங்குவதில் எந்தத் தடையும் ஏற்படாது என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். ஆனால், வைரஸ் எங்கிருந்து பரப்பப்பட்டன எனத் தெரியவில்லை.அவை குறித்து நிபுணர்கள் ஆய்வு செய்து வருகின்றனர்.

# ஏமன் அதிபர் பதவி விலக முடிவு? நம்ப மறுக்கும் அந் நாட்டு மக்கள்



ஏமனில் அதிபர் அலி அப்துல்லா சலேவுக்கு எதிராக கடந்த 6 மாதமாக பொதுமக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். போராட்டக்காரர்கள் இராணுவம் மூலம் ஒடுக்கப்பட்டு வருகின்றனர். இதில் ஏராளமானவர்கள் பலியாகி உள்ளனர். எனவே அதிபர் சலே பதவி விலக வேண்டும் என ஐ.நா.சபையும், உலக நாடுகளும் வலியுறுத்தி வருகின்றனர். ஆனால் அதை அவர் கண்டு கொள்ள வில்லை.

இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை உலக அமைதிக்கான நோபல் பரிசு ஏமன் நாட்டைச் சேர்ந்த தவாக்குல் கர்மான் என்ற பெண்ணுக்கு அறிவிக்கப்பட்டது. இவர் ஏமனில் நடைபெறும் மக்கள் போராட்டத்தை நடத்தி வருகிறார். கர்மானுக்கு நோபல் பரிசு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அதிபர் சலே பொதுமக்கள் போராட்டத்துக்கு பணிந்தார். நேற்று முன்தினம் அரசு டெலிவிஷனில் திடீரென தோன்றி பேசினார். அப்போது தான் அதிபர் பதவியில் இருந்து விலகப் போவதாக அறிவித்தார்.

அவர் பேசும்போது, அதிபர் பதவியில் தொடர்ந்து நீடிக்க நான் விரும்பவில்லை. எனவே இன்னும் சிறிது நாளில் பதவி விலகுவேன் என்றார். ஆனால் அவரது பேச்சை நோபல் பரிசு பெற்ற கர்மான் நம்பவில்லை. அதுபற்றி அவர் கூறும்போது, அவரது பேச்சில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை. இது போன்று பலமுறை கூறியுள்ளார். ஆனால் அவர் பதவி விலகவில்லை. தற்போது மக்கள் போராட்டத்தை திசை திருப்பவும், உலக நாடுகளின் கவனத்தை மாற்றவும் இந்த போலியான அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

மேலும் அவர் பதவி விலகும் திகதியை அறிவிக்கவில்லை. இவரது இந்த அறிவிப்பு முதல் முறையல்ல. வழக்கமான ஒன்று தான். எனவே எங்களின் போராட்டம் அமைதியான முறையில் தொடரும் என்றார். கடந்த ஜூன் மாதம் அதிபர் சலேவின் பங்களா மீது போராட்டக்காரர்கள் ராக்கெட் குண்டு வீசினார்கள். அதில் சலே உடல் கருகி படுகாயம் அடைந்தார். அதற்கான சிகிச்சை பெற சவுதி அரேபியா சென்ற அவர் கடந்த மாதம தான் ஏமன் திரும்பினார்.

# பத்திரிகை நிருபர் கொலை

பாகிஸ்தான் லாகூரில் உள்ள ஜோஹர் நகரைச் சேர்ந்தவர் பைசல் குரேஷி(28). இவர் லாகூரில் இருந்து வெளியாகும் தி லண்டன் போஸ்ட் என்ற பத்திரிகையின் தலைமை நிருபராக இருந்தார். இவர் தனது வீட்டில் கழுத்து அறுக்கப்பட்ட நிலையில் பிணமாகக் கிடந்தார். மேலும் அவரது உடல் உறுப்புகள் சிதைக்கப்பட்ட நிலையில் கொடூரமாக கிடந்தது. இந்தக் கொலையை செய்தது யார்? என தெரியவில்லை. பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

முத்தாகிதா குவாமி இயக்கத்தின் தலைவர் அல்டாப் உசேன் குறித்து தி லண்டன் டைம்ஸ் பத்திரிகையில் போஸ்ட் குரேஷி கட்டுரை எழுதி இருந்தார். இதைத் தொடர்ந்து அவர் தென்ஆபிரிக்காவுக்கு தப்பி சென்று விட்டார். எனவே அவரது இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்தான் பைசலை கொலை செய்திருக்க வேண்டும் என பொலிஸார் கருதுகின்றனர்.

# அமைதியை ஏற்படுத்துவதில் தோல்வி ஆப்கான் அதிபர் ஹமீத் கர்சாய்




ஆப்கானிஸ்தான் அரசும், அமெரிக்கா தலைமையிலான "நேட்டோ" படைகளும், ஆப்கானில் அமைதியை நிலை நாட்டுவதில் தோல்வி அடைந்துவிட்டன. பாகிஸ்தான் இல்லாமல், ஆப்கானில் தலிபான்கள் ஒரு சுண்டு விரலைக் கூட அசைக்க முடியாது என்ற நிலை ஏற்பட்டுள்ளது" என, ஆப்கான் அதிபர் ஹமீத் கர்சாய் தெரிவித்துள்ளார். ஆப்கானில், அமெரிக்கப் படைகள் நுழைந்து, 10 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டன. அதிபர் ஹமீத் கர்சாய் இது குறித்து, பி.பி.சி., செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது: ஆப்கான் அரசும், அமெரிக்கா தலைமையிலான "நேட்டோ" படைகளும், ஆப்கானில் அமைதியைக் கொண்டு வருவதில் தோல்வி அடைந்துவிட்டன. ஆப்கான் மீதான பாகிஸ்தானின் கொள்கையும், தலிபான்கள் மீதான கொள்கையும் ஒன்று போலத் தான் இருக்கிறது. தலிபான்கள், பல்வேறு தாக்குதல்களை ஆப்கானில் நடத்தி வருகின்றனர். ஆனால், அவர்களுக்கான மேலிட உத்தரவுகள் எல்லாம், வெளியில் இருந்து வருகின்றன. பாகிஸ்தான் ஆதரவு இல்லாமல், தலிபான்களால் சுண்டு விரலைக் கூட அசைக்க முடியாது. வரும் 2014க்குப் பின்,நான் அதிபர பதவியில் தொடரமாட்டேன். எனக்கு அடுத்து, அப்பதவியில் அமரப் போகிறவரை, நான் இப்போதே தேட ஆரம்பித்து விட்டேன். இவ்வாறு, கர்சாய் தெரிவித்தார்.

# வேலை வாய்ப்புச் செய்திகள்

வீட்டில் தங்கியிருந்து பணிபுரியக் கூடிய, தனிப்பட்ட பொறுப்புக்கள் அற்ற,30வயதிற்கு மேற்பட்ட பணிப் பெண் தேவை ஆர்வமுள்ளவர்கள் 0779004341 இற்கு தொடர்பு கொள்ளவும்.

கொழும்பில் இயங்கிவரும் பெயின்ற் உற்பத்தித் தொழிற்சாலைக்கு ஆண் தொழிலாளர்கள் தேவை 35 வயதிற்கு உட்பட்டவர்கள் கிராம சேவையாளரின் நற்சான்றுப் பத்திரத்துடன் 0773283372 இற்கு தொடர்பு கொள்ளவும் தங்குமிட வசதி செய்து தரப்படும்.

வீ.வீ.இராமநாதன் அன் கொம்பனியின் யாழ்,கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிர்மாணப்பணிகளுக்கு Sife engineors, Quantity Surveyors,Teehnicol officeers, Boilding Supevisors,Slre kepers,Security Guards,Direves தேவை ஆற்றலும் ஆர்வமும் உடையவர்கள் எதிர்வரும் செவ்வாய், ஞாயிறு 11.10.2011 அல்லது 16.10.2011 அன்று இல 23, நல்லூர் குறுக்கு வீதி, நல்லூர் யாழ்ப்பாணம் அல்லது பொது வைத்தியசாலை சுற்றுவட்ட வீதி வவுனியா என்ற முகவரிக்கு நேரில் வரவும்.

திருக்கேதீஸ்வர ஆலயத்தில் முகாமையாளர் நிர்வாக அலுவலகர் பணிக்கு ஆள் தேவை சமய உணர்வு,தமிழ், ஆங்கில மொழியறிவு மற்றும் கணக்கு அறிவுள்ளவர் 14.10.2011 இற்கு முன்னதாக Chairman, Board of Trustees, Thirukeetheeswaram, Temple Restoration Society, 24, Deal Place \A| Col - 03 my;yJ Chairman @ manithaneyam.org என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும். ஆலயத்தில் தங்குமிட வசதி செய்து தரப்படும்.

நிறுவனம் ஒன்றில் பொதி செய்வதற்கு பெண் பிள்ளைகள் உடன்தேவை ஆர்வமுள்ளவர்கள் 0776722055 இற்கு தொடர்பு கொள்ளவும்.

சந்தைப்படுத்தல், நிர்வாகம்,கணக்கியல்,வர்த்தகம் மற்றும் வியாபார முகாமைத்தும் ஆகிய துறைகளில் பட்டம் பெற்ற, பகுத்தறிவுடன் சிந்தித்துச் செயலாற்றும் சிறந்த தொடர்பு கொள்ளும் திறமையுடைய பட்டதாரிகள் தேவை மேற்படி தகமைகள் உள்ளவர் 0776281513 இற்கு அல்லது futurejob@kgrplanka.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது KG Industries, 545 ஸ்ரீ சங்கராஜ மாவத்தை Col-10 என்ற முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

மின்சார இலத்திரனியல் பொருள் விற்பனை நிலையத்திற்கு களஞ்சியக் காப்பாளர் தேவை ஆர்வமும்,முன் அனுபவமும் உள்ளவர்கள் மீடியா எலக்ரோ மாட், இல-1-1-1 ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரில் வரவும்

பாரதி கொம் மெகாமால் நிறுவனத்திற்கு விற்பனைப் பிரதிநிதி தேவை. வயது 18-35 கோண்டாவிலில் இருந்து 3KM தூரத்திற்கு உட்பட்ட, கணினி மற்றும் கணக்கியல் அனுபவமுள்ளவர்கள் 11.10.2011 அன்று காலை 9-12 மணிக்குள் இல-126 பலாலி வீதி கோண்டாவில் என்ற முகவரிக்கு நேரில் வரவும்.

புத்தகம்,ஸ்ரேசநெறிப் பொருட்கள் வியாபார ஸ்தாபனத்திற்கு விற்பனையாளர்கள் தேவை. ஆண்/பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது. ஆர்வமுடையவர்கள் நேரில் வரவும் சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும் தொடர்புகளுக்கு ஆல் சிலோன் டீஸ்ரிபியூட்டர்ஸ் 212 K.K.S வீதி யாழ்ப்பாணம் T.P-No 021 222 5542

விற்பனையாளர் தேவை சிறந்த் கவர்ச்சிகரமான பேச்சாற்றல் உள்ள விற்பனையாளர் உடன்தேவை ஆண்/பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது. சம்பள விபரம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம். ஆர்வமுடையோர் தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம் 0778551710 E.mail:- Jaffana g mailes@gmail.com

பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு உடனடியாக ஆர்வமும் திறமையும் அனுபவமும் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன. அலுவலக செய்தியாளர்கள் (இருபாலாரும்) விநியோக முகாமையாளர் (இரவுக் கடமை ஆண்கள்) பத்திரிகை மடிப்பவர்கள் (ஆண்கள்) உதவிக் கணக்காளர் (இருபாலாரும்) Offset இயந்திரம் இயக்குநர் மற்றும் பயிலுநர் (ஆண்கள்) கணினி ரைப்பிங் தமிழ் (ஆண்கள்)பக்கம் மற்றும் விளம்பர வடிவமைப்பாளர்கள் (இருபாலாரும்) சம்பள விபரம் மற்றும் ஏனை. விபரங்களை அறிவதற்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மனித வள முகாமையாளர் வலம்புரி இல 3,2ம் ஒழுங்கை பிறவுண் வீதி யாழ்ப்பாணம். 11.10.2011 இல் நடைபெற இருக்கும் நேர்முகத் தேர்விற்கு முன்னதாக உங்கள் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்.

வவுனியாவில் தோட்ட வேலைக்கு ஆட்கள் தேவை தங்கியிருந்து வேலை செய்யக் கூடியவர்கள் மற்றும் பெக்கிங் வேலைக்க ஆட்கள் தேவை ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கங்கள் 077 3118896, 077 6366311

பாடசாலை வான்(Van) ஓடுவதற்கு சாரதி உடனடியாகத்தேவை அனுபவம் வாய்ந்தவர் விருப்பத்தக்கது. பண்டைத்தரிப்பிலிருந்து -யாழ்ப்பாணம் சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும் தொடர்புகளுக்கு 0779182920,021 225 5392

அனுபவமும், ஆற்றலுமுள்ள சேவிஸ் (மோட்டார் சைக்கிள்) வேலை உடன் மெக்கானிக் அனுபவமும் உள்ளவர்கள் நேரில் வரவும் சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும் "வஜிதா மோட்டோஸ்" தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி 300/1 நாவலர் வீதி, ரயில்வே சந்தி யாழ்ப்பாணம் தொ.பே.இல - 0778097741

# பலஸ்தீனத்துடனான வர்த்தகத்தை மேலும் அதிகரிக்க நடவடிக்கை

**- அமைச்சர் றிசாட் பதியுதீன்**



(கொழும்பு)

இலங்கை - பலஸ்தீன நாடு பொருளாதாரத்துடன் 4.5 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான வியாபார மற்றும் வணிகத் தொடர்புகளை வெளிப்படுத்த விரும்புகின்றது. எதிர் காலத்தில் இரு நாடுகளிற்குமிடையே திடமான பலஸ்தீன பொருளாதாரத்தினால் பலமான பரஸ்பர வியாபார வாய்ப்புகளை ஏற்படுத்த முடியுமென கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர் ரிசாத் பதியுதீன் கூறினார். இலங்கைக்கான பலஸ்தீன தூதுவர் டாக்டர் அன்வர் அல் அகாவை சந்தித்து கலந்துரையாடிய போதே இந்த கருத்தை தெரிவித்தார்.

அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கும், பலஸ்தீன தூதுவருக்குமிடையில் சந்திப்பொன்று கைத்தொழில், வணிகத்துறை அமைச்சில் இடம் பெற்றது.

இலங்கை வணிக திணைக்களத்தின் அறிக்கையின் படி 2010 இல் இலங்கையிலிருந்து பலஸ்தீனத்திற்கான ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதி 0.02 மில்லியன் அமெரிக்க டொலர் ஆகும். ஆனால் இலங்கையில் பலஸ்தீனத்தால் எந்த பொருட்களும் இறக்குமதி செய்யப்படவில்லை. இது இலங்கைக்கான சாதகத் தன்மையையே உறுதிப்படுத்துகின்றது. இலங்கையிலிருந்து பலஸ்தீனிற்கு பிரதானமாக தெங்கு மற்றும் ஆடை உற்பத்தி பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

பலஸ்தீன் இலங்கையுடனான வியாபார மற்றும் வணிகத தொடர்புகளை மேலும் அதிகரிக்க தயாராக உள்ளதாகவும், இலங்கையுடனான வியாபார மற்றும் வணிக துறையினரை பலஸ்தீன் வர்த்தகர்கள் சந்திப்பதற்கு வாய்ப்பளிப்பதாகவும் அமைச்சருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது தூதுவர் டாக்டர் அன்வர் அல் அகா கூறினார்.

# மூத்த கல்வியாளர் கௌரவிப்பு

திருகோணமலையின் மூத்த கல்வியாளரான சிங்காரவேலு தண்டாயுதபாணி தனது 41வருட அரச கல்வி சேவையிலிருந்து ஓய்வு பெற்றதை முன்னிட்டு அவரை கௌரவிக்கும் முகமாக திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் விழா ஒன்றினை நேற்று முன்தினம் சனிக்கிழமை ஏற்பாடு செய்திருந்தது.



இந்நிகழ்வில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் வே.பொ.பாலசிங்கம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பு மலர் ஒன்றினை வெளியிட்டு வைத்தார். பேராசிரியர்களான தனராஸ், சோ.சந்தரசேகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

திருகோணமலை மாவட்ட சாரணர் சங்கம், புனித அம்பியுலன்ஸ் படையணி, திருகோணமலை வலயக் கல்வி அலுவலகம், ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி, புனித சூசையப்பர் கல்லூரி, பத்திரகாளி அம்பாள் பிரதம குரு வேதாகம மாமணி சோ.ரவிச்சந்தரகுருக்கள், ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி பாடசாலை அபிவிருத்தி சங்கம், பழைய மாணவர் சங்கம் என்பன சி.தண்டாயுதபாணிக்கு பொன்னாடை, பதக்கம், நினைவுப் பொருட்க[ள்] வழங்கி கௌரவித்தனர்.

# வாழ்வாதார உதவியாக கறவை மாடுகள் வழங்கி வைப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் யுத்தம்,வெள்ள அணர்த்தத்தினால் பாதிக்கப்பட்டோருக்கான வாழ்வாதார உதவிகள், கால்நடைகள் வழங்கி வைக்கும் வைபவம் கிழக்கு மாகாண கால்நடை அமைச்சர் து.நவரெட்ணராஜா தலைமையில் மட்டக்களப்பு கல்லடி கால்நடை அபிவிருத்தி அமைச்சின் அலுவலகத்தில் இடம்பெற்றது.



இந்நிகழ்வுக்கு கால்நடை மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான், கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், கிழக்கு மாகாணசபை உறுப்பினர் பூ.பிரசாந்தன் மற்றும் திணைக்கள உத்தியோகஸ்த்தர்கள் ஆகியோர்கள் கலந்து கொண்டார்கள்.

# பிரேம்குமாரும்; சீலனும் நீண்ட நேரச் சந்திப்பு

(கொழும்பு)

ஜே.வி.பி கிளர்ச்சிக்குழுவின் தலைவராகக் கருதப்படும் பிரேம்குமார் குணரட்னத்திற்கும் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் எனப்படும் பிள்ளையானின் செயலாளர்களில் ஒருவரான சீலன் என்பவருக்கும் இடையில் சந்திப்பு நடைபெற்றுள்ளதாக சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. திருகோணமலையில் இரகசியமாக நடைபெற்ற இந்தச் சந்திப்பிற்கு கறுப்பு நிற டொல்பின் ரக வான் வண்டியொன்றில் பிரேம் குமார் சென்றிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

நண்ட நேரமாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாகவும், செல்லும் போது சீலனின் வாகனத்தில் பிரேம்குமார் ஏறிச் சென்றதாகவும் பின்னர் இடை நடுவில் மீண்டும் தனது வாகனத்திற்கு மாறிக் கொண்டதாகவும் குறிப்பிடப்படுகிறது.

ஜே.வி.பி. முறுகல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டிருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது. சீலன் பிள்ளையானின் மிக நெருக்கமான ஆதரவாளர் எனவும், அம்பாறை மாவட்ட இணைப்பாளரா[க] கடமையாற்றி வருவதாகவும் குறிப்பிடப்படுகிறது.

# திருகோர்ணமலையில் முதியோர் தங்க இடமின்றித் தவிப்பு

(திருமலை)

திருகோணமலையில், மிகவும் பின்தங்கிய கிராமமான வரோதய நகர் கிராமத்தில் குடும்ப உறுப்பினர்களால் கைவிடப்பட்ட நிலையில் வாழும் முதியோர்களுக்கு வயோதிபர் இல்லமொன்றை உடனடியாக நிர்மாணித்துத் தரும்படி கோரி பாரதி கிராம முதியோர் சங்கம் அவசர வேண்டுகோள் அடங்கிய மகஜர் ஒன்றை கிழக்கு மாகாண முதலமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ளது.

## தந்தையை தாக்கிய இரு மகன்கள்

தந்தையை கடுமையாகத் தாக்கி காயப்படுத்திய இரு மகன்கள் உட்பட மூவர் நேற்று முன்தினம் ஹபரணை பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். 15 மற்றும் 16 வயதுடைய இரு மகன்கள் உட்பட மூவர் 39 வயதுடைய தந்தையை கடுமையாக தாக்கியுள்ளனர். தாக்குதலில் காயமடைந்த தந்தை வைத்தியசாலையில் ஹபரண வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக தம்புள்ளை வைததியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

# ஆலையடிவேம்பு பிரதேச சபை உறுப்பினர் காலமானார்

ஆலையடிவேம்பு பிரதேச சபையின் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, உறுப்பினர் வடிவேல் துஷ்யந்தன் நேற்று முன்தினம் பகல் வைத்தியசாலையில் மரணமாகியுள்ளார் என ஆலையடிவேம்பு பிரதேச சபை தவிசாளர் க.இரத்தினவேல் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று 7ஆம் பிரிவு குருக்கள் வீதியைச் சேர்ந்த ஆலையடிவேம்பு பிரதேச சபையின் உறுப்பினரான வடிவேல் துஷ்யந்தன் (வயது - 28) கடந்த சில நாட்களாக சுகயீனம் காரணமாக கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பயனளிக்காது நேற்றுமுன்தினம் பகல் மரணமாகியுள்ளார்.

# ஆளுமை விருத்திச் செயலமர்வு

(பருத்தித்துறை)

யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து கல்வி வல யங்களையும் சேர்ந்த அதிபர், கோட்டக்கல்விப் பணிப்பாளர் மற்றும் முறைசார் உதவிக்கல்விப்பணிப் பாளர்கள் ஆகியோருக்கான ஆளுமை விருத்திச் செயலமர்வு எதிர்வரும் 12, 13,ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. அன்றையதினம் காலை 7.30 மணி முதல் பிற்பகல் 5.30 மணிவரை யாழ். பிரதம தபால கத்திற்கு அருகாமையிலுள்ள ரில்கோ சிற்றி ஹோட்டலில் நடைபெறவுள்ள இச்செயலமர்வில் சகல வலயங்களிலுள்ள யுனிசெவ் செயற்றிட்ட பாடசாலைகளில் பொருத்தமான இரு அதிபர்களையும் மற்றும் கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள் முறைசாரா உதவிக்கல்விப் பணிப்பாளர்களையும் தவறாது பங்குபற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதிபர்களது பெயர் விபரங்களை மாகாண கல்வித்திணைக்களத்திற்கு தொலைநகல் மூலம் அனுப்பி வைக்குமாறு வட மாகாண மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் மு. இராதாகிருஷ்ணன். அறிவித்துள்ளார். (உ-109)

## பெண் மீது துப்பாக்கிச் சூடு

மொனராகலை மதகமப் பகுதியில் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பெண்ணொருவர் காணமடைந்துள்ளார். குறித்த பெண் தமது தோட்டத்திலிருந்த வேளையில் இனந்தெரியாத நபரொருவர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு தப்பிச்சென்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். காயமடைந்த பெண் மதகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைகளுக்காக மொனராகலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்

# விடுதலை கோரி கடிதம்

(கொழும்பு)

நியூயோர்க் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கனேடியத் தமிழர்கள் மூவர் தம்மை விடுதலை செய்யக்கோரி கடிதமொன்றை வெளியிட்டுள்ளதாக நெஸனல் போஸ்ட் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. புலிகள் அமைப்புக்கு ஆயுதங்களை விநியோகித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பெயரில் இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தார்கள். எவ்வாறாயினும் தாம் இலங்கை தமிழ் மக்களுக்கு நன்மை கிடைக்கும் என்ற நோக்கிலேயே புலிகள் அமைப்புக்கு உதவியதாக அவர்கள் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர். எனினும், அந்த செயற்பாடு சரியான விடயம் எனத் தெரிவித்துள்ள குறித்த தமிழர்கள், விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு ஆதரவளித்ததன் ஊடாக இலங்கையர்கள் எதிர்கொள்ள நேரிட்ட இன்னல்களுக்கு தாம் மன்னிப்பு கோருவதாகத் தெரிவித்துள்ளனர். இவர்கள் புலிகள் இயக்கத்தின் புலனாய்வுத் துறை தலைவராக இருந்த பொட்டு அம்மானின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாகவே ஆயுதங்களை விநியோகித்ததாக அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மக்களின் விருப்பின் அடிப்படையிலேயே கல்முனை மாநகரசபை மேயர் நியமனம்



(கல்முனை)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஜனநாயக கட்சி என்ற வகையில், மக்கள் வழங்கிய விருப்பின் அடிப்படையிலேயே கல்முனை மாநகர சபை மேயர் நியமிக்கப்படுவார் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளரும் உள்நாட்டு வர்த்தக கூட்டுறவு பிரதியமைச்சருமான பசீர் சேகுதாவூத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

கல்முனை மாநகர சபை தேர்தலின் முடிவு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இதயம் கல்முனை என்பதை மீண்டுமொரு முறை கல்முனை மக்கள் நிருபித்துள்ளார்கள். கல்முனை மாநகர சபை தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை கல்முனை மாநகர மக்கள் அமோக வெற்றியீட்டச் செய்துள்ளதுடன், கடந்த கல்முனை மாநகர சபையிலிருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களையும் இம்முறை அதிகரிக்கச் செய்துள்ளனர். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களின் உரிமைக்கான கட்சி என்பதையும் முஸ்லிம்களின் அபிலாஷைகள் முஸ்லிம் காங்கிரஸ் மூலமே வென்றெடுக்கப்பட வேண்டும் என்ற செய்தியையும் கல்முனை மாநகர சபை தேர்தல் மூலம் கல்முனை மக்கள் தெரிவித்துள்ளனர்.

# இந்திய மீனவர்கள் கடற்படையால் தாக்கப்பட்டதாக குற்றச்சாட்டு

இலங்கைக் கடற்படையினரின் தாக்குதலால் தமிழகத்தைச் சேர்ந்த 15 மீனவர்கள் காயமடைந்ததாக தமிழக பொலிஸார் தெரிவித்துள்ளனர். கச்சதீவுக்கு அருகில் இந்திய கடலில் இச்சம்பவம் இடம்பெற்றதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்திய மீனவர்களை இடைமறித்த இலங்கைக் கடற்படையினர் வானத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் மீனவர்களை தடிகளால் தாக்கி, அவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்த பகுதியிலிருந்து வெளியேறச் செய்ததாகவும் தமிழக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்திய மீனவர்கள் மீதான இலங்கைக் கடற்படையினரின் தாக்குதல் இந்தியாவின் மீதான தாக்குதல் எனவும் இத்தாக்குதல்கள் குறித்து இந்திய மத்திய அரசாங்கம் ஆராய வேண்டுமெனவும் தமிழக முதல்வர் ஜெயலலிதா கோரிக்கை விடுத்து ஒரு நாள் கடந்த நிலையில் இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

# முல்லேரியாப் பகுதியில் பாதுகாப்பு உஷார் நிலையில்

(முல்லேரியா)

நேற்று முன்தினம் துப்பாக்கிச் சண்டை இடம்பெற்ற முல்லேரியா பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் மாஅதிபர் என்.கே.இலங்ககோன் குறிப்பிட்டுள்ளார். பொலிஸார் விசேட அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத்தினர் முல்லேரியா பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த பாதுகாப்பு நடவடிக்கை நேற்று முன்தினம் மாலை முதல் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸ மாஅதிபர் சுட்டிக்காட்டினார்.

மூவரின் உயிர்களைக் காவு கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்துடன் தொடர்புடைய நபர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தற்போது மேற்கொள்ளும் விசாரணைகள் நிறைவடைந்தவுடன் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்படுவார்கள் எனவும் பொலிஸ் மாஅதிபர் என். கே இலங்கோன் தெரிவித்தார்.

# அரஸ்கோ தொழில் நிறுவனம் உரிமையாளரிடம் கையளிப்பு

அரியாலைப் பகுதியில் பல வருடங்களாக இராணுவப் பாவனையில் இருந்த அரஸ்கோ நிறுவனத்தின் காணிகள் உரிமையாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

யாழ்.அரச அதிபர் கடந்த வாரம் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதியுடன் மேற்படி விடயம் சம்பந்தமாகத் தொடர்பு கொண்டு பேசியதன் விளைவாக குறிப்பிட்ட நிறுவனப் பகுதி உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட நிறுவனம் மீள இயங்கும் பட்சத்தில் பெருமளவான இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (எஸ்)

## சுயாதீன.....

சம்பவங்கள் உயர்வடைந்துள்ளது. இந்தச் சம்பவங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். திட்டமிட்ட வகையில் சட்டவிரோத படுகொலைச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களைக் காண்பிக்கச் சென்றபோது பொலிஸார் மீது தாக்குதல் நடத்த முற்பட்ட கைதிகள் கொல்லப்படுவது வழமையானதாக மாறிவிட்டது.

எனினும், பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடைய கைதிகள் கைவிலங்கு இடப்பட்டு அழைத்துச் செல்லப்படுவதே வழமை என்பது அனைவரும் அறிந்ததே. கைதிகள் தாக்க முற்பட்டதாகவும், தற்பாதுகாப்பு நோக்கில் கைதிகளை கொன்றதாகவும் பொலிஸார் வெளியிடும் அறிக்கைகளில் உண்மையில்லை.

மொரட்டுவையில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை சிலர் தாக்கிக் கொன்றமை பாரிய குற்றச்செயல் என்பதில் மறுப்பு கிடையாது என்றபோதிலும், சந்தேக நபர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டுமே தவிர, பொலிஸாரே தண்டிக்கக் கூடாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# தனியார் பாடசாலைச் சிறுவர்களின் சிறப்பாக நடைபெற்ற முத்தமிழ் விழா

(யாழ்ப்பாணம்)

பிரிட்டிஷ் பிஸினஸ் தனியார் பாடசாலையின் முத்தமிழ் விழா நேற்றுக் காலை 8.00 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் பாடசாலைப் பணிப்பாளர் திருமதி யசிந்தா அன்ரனி தலைமையில் நடைபெற்றது.

சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்த இந்நிகழ்வில், யாழ்ப்பாணம், கோப்பாய், சாவகச்சேரி, பருத்தித்துறை, அச்சுவேலி, நீர்வேலி ஆகிய இடங்களில் உள்ள பாடசாலைக் கிளைகள் இணைந்து இவ் விழாவினை ஏற்பாடு செய்திருந்தன.

சாவகச்சேரி பிரிட்டிஷ் பிஸினஸ் பாடசாலை மாணவியின் வரவேற்புரை, நீர்வேலி பிரிட்டிஷ் பிஸினஸ் பாடசாலை மாணவிகளின் வரவேற்பு நடனம் என்பன இடம்பெற்றது.

அடுத்த நிகழ்வாக பிரதம விருந்தினரான கலாநிதி மதுரகவி காரை எம்.பி. அருளானந்தனின் சிறப்புரை என்ப இடம்பெற்றதுடன், சிறுவர்களின் பாட்டு, பேச்சு, நடனம், இசை நிகழ்ச்சி, நாடகம், தாளலயம் என 85 இற்கும் அதிகமான நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில், பிரிட்டிஷ் பிஸினஸ் பாடசாலை இயக்குனர் பூபதி சின்னத்துரை, பிரிட்டிஷ் பிஸினஸ் பாடசாலைப் பணிப்பாளர் யசிந்தா அன்ரனி உட்பட பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எஸ்)

## இலங்கை....

ஒருபகுதி, சிங்களப் பிரிவுடன் இணைக்கப்பட்டு தனியொரு பிரதேச செயலகமாக உருவாக்கப்பட்டமை, காணிப்பதிவுகள் வடக்கு கிழக்குப் பகுதிகளின் தற்போதைய நிலைமை என்பன தொடர்பாக விரிவாக எடுத்துக்கூறிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அரசுடனான பேச்சுக்கள் தொடர்ந்தும் இழுபட்டு, நீண்டு செல்வதையும் விபரித்தார்.

அத்துடன், அரசுடனான பேச்சில் இந்திய அனுசரணை வகித்து தீர்வைப் பெற்றுத்தர வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

இதற்குப் பிடிகொடாமல் பதிலளித்த வெளிவிவகாரச் செயலர், இலங்கை அரசுடன் பேசியே தீர்வைக் காண்பதற்கு முயற்சிக்க வேண்டுமெனத் தெரிவித்தார்.

சுமார் முக்கால் மணி நேரம் நடைபெற்ற இச்சந்திப்பில் கூட்டமைப்பின் சார்பில் தலைவர் இரா.சம்பந்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன், சுமந்திரன், அ.விநாயகமூர்த்தி ஆகியோரும், இந்தியத் தரப்பில் வெளிவிவகாரச் செயலர் ரஞ்சன் மாத்தாய், தூதுவர் அசோக் கே காந்தா மற்றும் பிரதித் தூதுவரும் கலந்துகொண்டனர்.

## வட்டக்கச்சியில்....

பெண்ணும் உறங்கச் சென்றுள்ளார். அதிகாலை வேளை அவர் அணிந்திருந்த சங்கிலி, தோடு ஆகியவற்றையும் அபகரிக்க இவர்கள் முற்பட்டவேளை இடம்பெற்ற இழுபறியில் பெண்ணின் கழுத்தில் கத்தியால் குத்திக் கொலை செய்துவிட்டு நகைகளை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் ஈடுபட்டதாகத் தெரிவித்து மூன்று சந்தேக நபர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். ஹட்சன் வீதி, வட்டக்கச்சியைச் சேர்ந்த சிவானந்தன் சுகந்திரன் (வயது-24) குடியிருப்பு வவுனியாவைச் சேர்ந்த சிவலிங்கம் சுதர்சன் (வயது-32) மாறம்பைக் குளம் தனபாலசிங்கம் நிரோஷன் (வயது-26) ஆகிய மூவருமே கைது செய்யப்பட்டதாகவும், இவர்கள் இன்று கிளிநொச்சி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், இவர்கள் கொலைக்குப் பயன்படுத்தியதாகத் தெரிவிக்கப்படும் கத்தி மற்றும் அணிந்திருந்த உடுப்பு இரத்தம் தோய்ந்த நிலையிலும், இவர்கள் பயன்படுத்திய வானும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

## குடாநாட்டு...

மாதகல் பகுதி மீனவர்கள், இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயலால் பெருமளவில் பாதிக்கப்படுவது தொடர்பாகவும் கூறப்பட்டது.

பளை, இயக்கச்சிப் பகுதியில் இந்திய அரசின் உதவியுடன் அமைக்கப்படும் 53 வீடுகளையும் இவர்கள் பார்வையிட்டனர்.

வடமாகாண ஆளுநரின் வாசஸ்தலத்தில் நேற்று மாலை பகல் 1.00 மணியளவில் இடம்பெற்ற சந்திப்பில் ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி, அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் உட்பட அதிகாரிகளும்,

இந்திய வெளியுறவுச் செயலருடன் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தா, யாழ்.இந்திய துணைத் தூதரக அதிகாரி மகாலிங்கம் உட்பட அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (எஸ்)

## பாரத லக்ஷ்மனும்....

தீவிர விசாரணை அவசியம் என்பதையும் வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய ஐ.தே.க.வின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

முல்லேரியா சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்காக நாம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். இருவருக்கு இடையிலான பிரச்சினையில் அவர்களைச் சார்ந்தோர் கொல்லப்படுவது வருத்தத்துக்குரியது.


இச்சம்பவம் தொடர்பில் சுயாதீனமான விசாரணை அவசியமாகும். கொலன்னாவை, முல்லேரியா பகுதியில் வன்முறைகள் அதிகரித்துள்ளதாக பவ்ரல் அமைப்பு பலமுறை சுட்டிக் காட்டியது. எனினும், அரசாங்கம் அதனைக் கருத்திற்கொள்ளவில்லை.

அதனால் என்ன நடந்தது? அரசாங்கத்தின் துப்பாக்கிகளைப் பயன்படுத்தி வன்முறைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். இது பாரதூரமான விடயமாகும்.

அரசாங்கம் இது தொடர்பில் பக்கச்சார்பற்ற முறையிலான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

செய்திப்பாணம்

**ஆர்ப்பாட்டத் தில்குதிக்க ஆக்கப்பட்ட னராமாணவா;**
**தார்மீக ஆவேசமடைய தானெனவுள? - கூர்மையுறு**
**தேர்வுக்கு அனுமதி தராதவிடம் மனிதவுரிமைப்**
**பார்வையிற் சமர்ப்பிப்பா பிழை?**



# சிவில் பாதுகாப்புக் குழுக்களின் நோக்கம் சுதந்திர வாழ்வை உறுதிப்படுத்துவதாகும்

## என்கிறார் குற்றத் தடுப்பு பிரிவு அதிகாரி லக்சிறி



(நல்லூர்)

சிவில் பாதுகாப்புக் குழுக்களின் நோக்கம் மக்கள் சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் வாழ்வதை உறுதிப்படுத்துவதேயாகும். இதற்காக பொலிஸாரும் பொதுமக்களும் ஒன்றிணைந்து செயற்படுவது அவசியமாகும் என யாழ். பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவு அதிகாரி லக்சிறி தெரிவித்தார்.

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நேற்று இடம்பெற்ற சிவில் பாதுகாப்புக் குழுக்களின் செயற்பாடு தொடர்பாக பொதுமக்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கந்தர்மடம் வடமேற்கு கிராம அலுவலர் எஸ்.ஸ்ரீஸ்கந்தராஜா தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கந்தர்மடம் கிராமமானது மேலோட்டமாக அவதானிக்கும் போது குற்றச்செயல்கள் அற்ற ஒரு பிரதேசமாக தோன்றுகின்றது. எனினும் நாம் உள்சென்று அவதானித்தால் பல்வேறு பிரச்சினைகளை இனங்காண முடியும்.

இது போன்றே ஏனைய கிராமங்களிலும் பிரச்சினைகள் இருக்கும். இவற்றை வெளிக்கொண்டு வருவதில் சிவில் பாதுகாப்புக் குழுக்கள் பொலிஸாருக்கு உதவ முடியும்.

சிவில் பாதுகாப்புக் குழுக்களின் செயற்பாடு ஒரு தேசிய வேலைத்திட்டமாகும். , நாடளாவிய ரீதியில் 14 ஆயிரத்து 973 சிவில் பாதுகாப்புக் குழுக்கள் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு உள்ளூரில் இருக்கும் அச்சுறுத்தலைவிட தென்பகுதியைச் சேர்ந்த சில நபர்களும் மோசடி நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். இது குறித்து மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் நடவடிக்கைகள் தொடர்பில் விழிப்பாக இருக்க வேண்டும். குறிப்பாக வீடுகளில் கணினியை வைத்திருப்போர் பிள்ளைகள் என்ன செய்கின்றார்கள் என்பதை அவதானிப்பது அவசியமாகும்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு தமிழ் மட்டுமன்றி சிங்கள மொழி அறிவையும் வளர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும். ஏனெனில் எதிர்காலத்தில் பிற மாவட்டங்களுடன் தொடர்புகளைப் பேணும்போது மொழி ஒரு பிரச்சினையாக இருக்கக் கூடாது.

பொதுமக்கள் பொலிஸாருடன் இணைந்து வேலை செய்வதற்கு மொழி பிரதான தடையாக இருக்கின்ற அதேவேளை நாமும் தமிழ் கற்க முயற்சிக்கின்றோம். எனவே நான் நம்பிக்கையுடன் வந்துள்ளேன்.

பொதுமக்களும் பொலிஸாரும் இணைந்து வேலை செய்வதன் மூலம் எமது மக்களின் நிம்மதியான வாழ்வுக்கு உழைப்போம் என்றார். (26)

# கொரிய மொழிப் பரீட்சையில் மோசடியைத் தவிர்க்க பாதுகாப்பு

(கொழும்பு)

எதிர்வரும் 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ள கொரிய மொழித் தேர்ச்சிப் பரீட்சைக்காக கடுமையான பொலிஸ் பாதுகாப்பு வழங்க கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தவிசாளர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்தார்.

இவ்வருடம் இந்தப் பரீட்சை கொழும்பில் மாத்திரம்தான் நடத்தப்படுகிறது. கொழும்பில் நகரில் 10 பரீட்சை மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதற்காக 600 பொலிஸ் அதிகாரிகள் பாதுகாப்பு வழங்குவதற்கு கொழும்பு மாவட்ட பொறுப்புவாய்ந்த பிரதிப் பொலிஸ் அதிபர் அநுர சேனநாயக்க இணக்கம் தெரிவித்துள்ளார்.

பரீட்சையின் போது மேற்கொள்ளப்படும் சிக்கல்களையும் சந்தேகங்களையும் சட்டவிரோத நடவடிக்கைகளையும் தடுப்பதை நோக்கமாகக் கொண்டே இந்தப் பொலிஸ் பாதுகாப்பு கேட்டுக் கொள்ளப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

தொலைபேசி மூலமாகவோ அல்லது வேறு தொழில் நுட்ப முறையைப் பயன்படுத்தி பரீட்சையில் மோசடியில் மேற்கொள்ளவுள்ள முயற்சிகளைத் தடுப்பதோடு இந்த நபர்களை கைது செய்யவும் நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாரைக் கேட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்தப் பரீட்சையின் போது எந்தவொரு நபராவது மோசடியில் ஈடுபட தயாராக இருப்பாராயின் தகவல் வழங்குமாறும் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுக்கு அறியத் தருமாறு தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

தொலைபேசி இலக்கங்கள் 0112433342, 0112322322, 077 3140300 அல்லது 0112864118

# ஊர்வலம், ஆர்ப்பாட்டம் ஒரு வாரத்திற்கு இல்லை

(கொழும்பு)

இலங்கையில் ஒரு வார காலத்துக்கு ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் நடத்தத் தடை

உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ள நிலையில் எதிர்வரும் ஒரு வார காலத்துக்கு ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் நடத்துவதற்கு பொலிஸ் தலைமையகம் தடை விதித்துள்ளது.

தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் ஏனையோருக்கு இடையூறு செய்யாமல் அமைதியான முறையில் கொண்டாட்டங்களில் ஈடுபடுமாறு தேர்தலுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் காமினி நவரத்ன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தேர்தல் தினத்தன்று முல்லேரியா சம்பவத்தைத் தவிர பாரிய அசம்பாவிதங்கள் எதுவும் நடைபெறவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்

# இவ்வருடத்தில் இதுவரை டெங்கால் 140 பேர் பலி

(கொழும்பு)

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியினுள்ளும் டெங்கு தொற்று காரணமாக 140 பேர் பலியாகியுள்ளனர். சுகாதார அமைச்சின் தொற்று நோய் பிரிவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் முதல் 10 மாத காலப்பகுதியினுள், 19 ஆயிரத்து 372 பேர் இந்த நோய் தொற்றுக்கு உள்ளானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி கொழும்பு மாவட்டத்திலேயே, அதிக டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர். கொழும்பு மாவட்டத்தில் 7 ஆயிரத்து 531 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 64 பேர் தொற்றின் காரணமாக பலியாகியுள்ளனர்.

கொழும்பு மாவட்டத்திற்கு அடுத்தபடியாக கம்பஹா மாவட்டத்திலேயே அதிக டெங்கு தொற்றாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர்.

இந்த மாவட்டத்தில் 2 ஆயிரத்து 976 பேர் நோயின் தாக்கத்திற்கு உள்ளாகினர்.

தொற்று காரணமாக கம்பஹா மாவட்டத்தில் மாத்திரம் 22 பேர் பலியாகியுள்ளதாக சுகாதார அமைச்சு விடுத்துள்ள அறிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

களுத்துறை மாவட்டத்தில் டெங்கு தொற்றாளர்கள் ஆயிரத்து ஆறு பேர் இனம் காணப்பட்ட நிலையில், அங்கு 7 பேர் பலியாகினர்.

இது தவிர புத்தளம் மாவட்டத்தில், டெங்கு தொற்று நோய் காரணமாக 7 பேர் மரணமானதுடன் 394 பேர் தொற்றுக்கான சிகிச்சையினை பெற்றுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# ருவென்ரி 20 இறுதிப் போட்டி கிண்ணம் வென்றது மும்பை



நொக்கியா சம்பியன்ஸ் லீக் ருவென்ரி 20 இறுதிப் போட்டியில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியைத் தோற்கடித்து மும்பை இந்தியன்ஸ் கிண்ணத்தை கைப்பற்றியது.

சென்னை சிதம்பரம் மைதானத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற பகல் இரவு போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பை இந்தியன்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. இதன்படி அவ்வணி 20 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 139 ஓட்டங்களை மட்டும் பெற்றது. அணிசார்பாக பிராங்கிளின் கூடுதலாக 41 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் பட்கல் 3, வெற்ரோரி 2 விக்கெட்டை கைப்பற்றினர்.

பதிலுக்கு 140 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பெங்களூர் அணி 20 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 108 ஓட்டங்களைப் பெற்று 31 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. இதில் டில்ஷான் 27, நனஸ் 20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் ஹர்பஜன் 3, மலிங்க, அகமட், சகால் 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக ஹர்பஜன், தொடர் நாயகனாக மலிங்க தெரிவாகினர்.

# ஊர்காவற்றுறை பாதையுடன் மோதி மக்கள் சென்ற படகு கடலில் மூழ்கியது

(யாழ்ப்பாணம்)

காரைநகரிலிருந்து படகு மூலம் அனலைதீவுக்குச் சென்ற மக்களின் படகு மூழ்கிய நிலையில், கடற்படை மற்றும் ஈ.பி.டி.பி. கட்சியினரின் செயற்பாட்டினால் அவர்கள் அனைவரும் காப்பாற்றப்பட்ட அதேவேளை, படகு முற்று முழுதாகக் கடலில் மூழ்கியது.

நேற்று மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கடற்படையினரின் ஏற்பாட்டில் காரைநகர் பிரதேசத்தில் நேற்றைய தினம் இலவச மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இதனைப் பெற்றுக்கொள்ளும் முகமாக அனலைதீவிலிருந்து 33 பேர் படகு மூலம் காரைநக ருக்கு வருகை தந்தனர். இவர்கள் தமது கண் பரிசோதனையை முடித்து மூக்குக் கண்ணாடிகளைப் பெற்றுக்கொண்டு மீளவும் நேற்று மாலை 5.20 மணியளவில் அனலைதீவிற்கு திரும்பியவேளை ஊர்காவற்துறைப் பகுதியிலுள்ள ஊருண்டிமுனை என்ற இடத்தில் இருந்த பாதையுடன் படகு மோதி கடலுக்குள் மூழ்கத் தொடங்கியது. எனினும் அருகிலிருந்த கடற்படையினரும், ஈ.பி.டி.பி.யினரும் விரைந்து செயற்பட்டு படகிலிருந்த அனைவரையும் காப்பாற்றினர். எனினும் படகு கடலுக்குள் மூழ்கிவிட்டது.

# காதலில் தோல்வி சிப்பாய் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

காரைநகர் இராணுவ முகாமில் இருந்த இராணுவச் சிப்பாய் காதல் தோல்வியால் தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

வெள்ளவத்தையைச் சேர்ந்த ஆராச்சிகே புஸ்பகுமார (வயது 22) என்ற இராணுவச் சிப்பாயே காதலியுடன் ஏற்பட்ட தகராறு காரணமாக இவ்வாறு தற்கொலை செய்து கொண்ட வராவார்.

சிப்பாயின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு இராணுவ அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.(எஸ்)

# கடுமையான வரட்சி காரணமாக 12 மில்லியனை இழந்த மின்சார சபை

(கொழும்பு)

இலங்கையில் ஏற்பட்ட வரட்சியின் காரணமாக மின்சார சபைக்கு 12 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக மின் சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இந்த ஆண்டு ஓகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களிலேயே 12 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

பருவ மழை தாமதித்த காரணத்தினால் நீர் மின்சாரத்தை ஈடு செய்ய வெப்ப சக்தியை பயன்படுத்திக் கொண்டதன் விளைவாக இந்த நிலைமை தோன்றியுள்ளதாக அவர் கூறினார்.

இதனடிப்படையில் இலங்கை மின்சார சபைக்கு தினசரி 120 முதல் 150 மில்லியன் ரூபா நட்டம் ஏற்படுவதாக அமைச்சர் தெரிவித்தார்.

நாட்டிலுள்ள நீர்த்தேக்கங்களின் கொள்ளளவு ஜூலை மாதத்தில் 20 சதவீதமாக இருந்து மார்ச், ஆகஸ்ட் மற்றும் செப்ரெம்பர் மாதங்களில் குறைவடைந்து சென்றது.

எனினும் இந்நிலைமை செப்ரெம்பர் மாதம் முதல் அதிகரித்து வருகிறது. தற்போது நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் 35 சதவீதமாக உயர்வடைந்து செல்கிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஒக்டோபர் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.